REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மே 11 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 109 | Wednesday 11, May, 2022 | 12 பக்கங்கள் | 40/-

## அமைதியாக இருக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை

### சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள்

தீர்மானமிக்க தருணங்களில் வன்முறையில் ஈடுபடாமல் அமைதியாக இருக்குமாறு பொதுமக்களை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக

08

## வன்முறை பழிவாங்கல்களை கைவிட்டு அமைதியாகுங்கள்

### மக்களிடம் ஜனாதிபதி கோட்டாபய வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நபர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பழிவாங்கல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



அத்துடன் வன்முறைகளுக்கு இடமளிக்காமல் அமைதி காக்குமாறும் ஜனாதிபதி மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். அதேவேளை மக்கள் ஆணைக்கிணங்க பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் அரசியல் ஸ்திரத் தன்மையை நிலைநாட்ட அனைத்து நடவடிக்கைகளும்

08

## அலரி மாளிகையிலிருந்து வெளியேறினார் மஹிந்த

### பதவி விலகலை உறுதிசெய்தது வர்த்தமானி



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் இருந்து வெளியேறியுள்ளார்.

இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியமையை உறுதி செய்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அலரி மாளிகைக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று அதிகாலை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார். தமது பதவி விலகல்

08

## நேர்மையாக ஈட்டிய சொத்துக்கள் அழிப்பு

### SLPP எம்.பி குணபால எம்.பி. கவலை



தனது வீடு எரிக்கப்பட்டமை பெரும் கவலை தருவதாக பாராளுமன்ற உறுப்பினர் குணபால ரத்னசேகர, தனது பேஸ்புக் பக்கத்தில் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.

மோசடி செய்யாமல் நேர்மையாக சம்பாதித்த சொத்துக்கள் மட்டுமே தன்னிடம் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பேராசிரியரான அவர்

08

### மக்களை பாதுகாக்க வேண்டிய பொலிஸ்;

## தனது கடமையிலிருந்து முழுமையாக தவறியது

### செந்தில் தொண்டமான் கண்டனம்



நாட்டின் நிலைமை சீர்குலைந்துள்ள சந்தர்ப்பத்தில் மக்களுக்கிடையிலே வன்முறை தூண்டப்பட்டுள்ளது. மக்களை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் தன் கடமையை செய்ய தவறிவிட்டனர் என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனத்தை தெரிவித்துள்ளார். நாட்டில் பொது மக்களையும்,

08

### ஊரடங்குச் சட்டம் இன்று காலை தளர்த்தப்படும் சாத்தியம்

# நாட்டில் குழப்பகரமான சூழ்நிலை தொடர்கிறது

### அரசியல் பிரமுகர்களின் வீடுகள் மீது நேற்றும் தாக்குதல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் அமைதிச் சூழ்நிலையை பாதுகாக்கும் வகையில் நாடளாவிய ரீதி யில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் இன்று கா லை ஏழு மணியுடன் தளர்த்தப்படுகிறது. நேற்று முன்தினம் கொ ழும்பிலும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நிலவிய குழப்பகரமான சூழ்நிலை நேற்றும் தொடர்ந்த நிலையில் நாட்டின் அமைதி சூழ்நிலையை பாதுகாக்கும் வகையில் தொடர்ந்தும் சட்டத்துக்கு மதிப்பளித்து நடந்து கொள்ள வேண்டியது மக்களின் பொறுப்பு எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

**பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பல்வேறு வன்முறை சம்பவங்கள் நேற்றும் பதிவாகின**

**தாக்குதல் வன்முறை சம்பவங்களில் இதுவரை 08 பேர் பலி; 219 பேருக்கு காயம்**

**அமைதிபேண ஒத்துழைக்குமாறு அரசாங்கம் மக்களிடம் வேண்டுகோள்**

நேற்று பிற்பகல் முதல் அலரி மாளிகைக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது அலரிமாளிகையின் நுழைவாயிலை

08

### வன்முறையில் தரைமட்டமாக்கப்பட்ட பின்

## காலிமுகத்திடலில் மீளுருவாகிய எழுச்சிப் போராட்ட கோஷங்கள்




காலிமுகத்திடலில் ஏற்பட்ட வன்முறையை அடுத்து தரைமட்டமாக்கப்பட்ட கோட்டா கோ கம மீள உருவாக்கப்பட்டு நேற்றும் (10) போராட்டம் தொடர்கிறது. கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் அமைதியான முறையில் ஆரம்பமான மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒரு மாதத்தைக்

08

### காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் குழப்பம்

## பக்கச்சார்பற்ற விசாரணைக்கு IGPக்கு சட்டமா அதிபர் பணிப்பு





காலி முகத்திடல் போராட்ட மைதானத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் பொலிஸ் மாஅதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அதற்கான காரணங்களை கண்டறிய உடனடியாக விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலம் அவர் அறிவித்துள்ளார். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான தாக்குதல்களைத்

08

## சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் மீது தாக்குதல்



மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், குழுவொன்றினால் தாக்கப்பட்டதில் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கங்காராம விஹாரைக்கு அருகில் நேற்று (10) இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, கூட்டத்தை கலைக்க பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற வேளையில் சிரேஷ்ட

08

## கட்டவிழ்த்து விட்ட பேரழிவுக்கு ராஜபக்ஷவினரே முழுப் பொறுப்பு

### டுவிட்டரில் கோபத்தை வெளிப்படுத்திய சஜித்



கட்டவிழ்த்து விடப்பட்ட அழிவிற்கு ராஜபக்ஷக்களே முழுப் பொறுப்பு என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் நேற்று காலை அவர் பதிவிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

அனைவரையும் உள்ளடக்கிய, அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அரசாங்க ஆதரவு வன்முறையால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அவர்கள் கட்டவிழ்த்து விட்ட அழிவிற்கு ராஜபக்ஷக்கள் தான் முழுப் பொறுப்பு.

அவர்கள் செய்த குற்றச் செயல்களுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும் என சுட்டிக் காட்டியுள்ளார்.

## IGP, இராணுவத் தளபதிக்கு மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு அழைப்பு

பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி ஆகியோரை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நாளை 12 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மைனா கோகம, கோட்டா கோ கம பகுதிகளில்

08

## துப்பாக்கிச் சூடு நடத்த ஆயுதப் படைகளுக்கு அனுமதி

### பாதுகாப்பு அமைச்சின் விசேட அறிவித்தல்




நாட்டின் தற்போதை அசாதாரண சூழ்நிலையை கருத்திற் கொண்டு முப்படைகளுக்கு துப்பாக்கி சூடு நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சினால் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கலகத்தில் ஈடுபடுவோர், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பவர்கள் அல்லது சேதம் விளைவிக்கும் நபர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்த முப்படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்தோடு, நபர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவர்கள் மீதும் துப்பாக்கி சூடு நடத்த முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுமார் 25 பிரமுகர்களது வீடுகள் தாக்கி எரிப்பு

### முழுவிபரங்களையும் வெளியிட்டு அறிக்கை



ஆளுங்கட்சியின் 25 இற்கும் மேற்பட்ட அரசியல் பிரமுகர்களின் வீடுகள் மக்களால் நேற்று முன்தினம் இரவு அடித்து நொறுக்கப்பட்டு எரியூட்டப்பட்டன.

08

## பிரதமர் மட்டுமல்ல முழு அரசாங்கமுமே பதவி விலக வேண்டும்



பிரதமர் மட்டுமன்றி முழு அரசாங்கமுமே பதவி விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கோட்டா கோ கம மீதான தாக்குதலைக் கண்டித்தும் தற்போதைய மோதல் நிலைமை தொடர்பிலும்

08



**முதல் குற்றவாளி அவரே அவரை உடன் கைது செய்க**
SJB செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார 03



**ஞானக்காவின் கோவில், ஹோட்டல், வீடு தீக்கிரை**
நேற்று அதிகாலை மக்களால் முற்றுகை 03



**58 சிறைக்கைதிகளை காணவில்லை என புகார்**
சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு 03

## இலங்கையின் நிலைமை உலக வங்கி கவலை!

### பொறுப்புக்கூறல் அவசியம் என்கிறது

இலங்கையில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை கவலையளிப்பதாக தெரிவித்துள்ள உலக வங்கி, இந்த வன்முறைகள் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் நடவடிக்கைகளை மேலும் கடினமாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கை, நேபாளம் மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளுக்கான உலக வங்கியின் பணிப்பாளர் ஃபரிஸ் எச்.ஹடட் தமது டுவிட்டர் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உடனடி பொருளாதார

08

## அரச பயங்கரவாதம் அகோரமாக அம்பலம்

### மனோகணேசன் எம்பி காட்டம்



இந்நாட்டில் 2005ம் வருடத்தில் இருந்து தலைவிரித்தாடிய ராஜபக்ஷ அரச பயங்கரவாதம், உச்ச கட்டத்தை அடைந்து, இன்று தன் சொந்த மக்கள் மற்றும் வாக்களித்து ஆட்சியில் அமர்த்திய மக்கள் மீதே அகோரமாக பாய்ந்துள்ளது. அதன்மூலம் ராஜபக்ஷக்களின் கோர பயங்கரவாத முகம், சகோதர சிங்கள மக்கள் மத்தியில் இன்று அம்பலமாகியுள்ளது என தமிழ் முற்போக்கு

08

## இறுதி நேர வன்முறைக்கு ராஜபக்ஷவினரே காரணம்

### C.V.விக்னேஸ்வரன் MP குற்றச்சாட்டு



அணையப் போகும் விளக்கு கடைசி நேரத்தில் வெளிச்சத்தை கொடுப்பது போல இறுதி நேரத்தில் வன்முறையை ராஜபக்ஷவினர் உருவாக்கியிருக்கின்றார்கள் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சமகால நிலை தொடர்பாக கருத்து தெரிவித்த போதே இவ்வாறு கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

08

## வன்முறைகள் இராணுவ ஆட்சிக்கு வழிவகுக்கலாம்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா எச்சரிக்கை



தற்போதைய சூழ்நிலையில் நாட்டில் இராணுவ ஆட்சி அமுல்படுத்தப்படும் என இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க எச்சரித்துள்ளார். ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக கடந்த சில வாரங்களாக அலரிமாளிகைக்கு அருகாமையிலும், கொழும்பு காலிமுகத்திடலிலும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது அரசாங்க

08

## குமார வெல்கம MP தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதி



மாகும்புர பகுதியில் வைத்து தாக்குதலுக்கு உள்ளான பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஹோமாகம வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த அவரது ஓட்டுநரும் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த தாக்குதலில் குமார வெல்கமவின் ஒரு கையில்

08

# சர்வதேச செய்திகள்

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக முன்னாள் சர்வாதிகாரியின் மகன் அமோக வெற்றி

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் அந்நாட்டின் முன்னாள் சர்வாதிகாரியின் மகன் பெர்டினன்ட் 'பொங்பொங்' மார்கோஸ் ஜூனியர் அமோக வெற்றியீட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தேர்தல் முடிவுகளின்படி தற்போது செனட்டராக இருக்கும் மார்கோஸ் 55.8 வீத வாக்குகளை வென்றிருப்பதோடு அவரது போட்டியாளரான லெனி ரொப்ரேடோ 28 வீத வாக்குகளை பெற்றுள்ளார்.

இதன்மூலம் 36 ஆண்டுகளுக்குப் பின்னர் பிலிப்பைன்ஸில் மீண்டும் மார்கோஸ் குடும்பம் ஆட்சிக்கு வந்துள்ளது.

முன்னர் அவரது குடும்பம் ஆட்சியில் இருந்தபோது பெரும் ஊழல் இடம்பெற்றதாகக் கூறுகின்றபோதும், அவரது ஆதரவாளர்கள் அதனை ஒரு பொற்காலமாக குறிப்பிடுகின்றனர்.

அவரது தந்தையான முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்கோஸ், அவரது கொடிய ஆட்சியால் தொடர்ந்து நினைவுகூரப்படுபவராக உள்ளார். மார்கோஸ் மற்றும் அவரது மனைவி



இமெல்டா பொது நிதியில் இருந்து 10 பில்லியன் டொலர்களை கொள்ளையடித்ததாக குற்றஞ்சாட்டப்படுகிறது. அவர் 1986 இல் மக்கள் எழுச்சி போராட்டத்தின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்டார்.

அவரது காலப்பகுதியில் பிலிப்பைன்ஸ் பெரும் கடன் பிரச்சினைக்கு முகம்கொடுத்ததோடு சாதாரண மக்கள் நெருக்கடியை சந்தித்தனர்.

64 வயதான மார்கோஸ் ஜூனியர் அரசியலுக்கு புதியவரல்ல. கடந்த பல ஆண்டுகளில் தேர்தல்களில் வெற்றியீட்டி பல பதவிகளை வகித்துள்ளார். எனினும் 2016 ஆம் ஆண்டில் துணை ஜனாதிபதிக்கான தேர்தலில் ரொப்ரேடோவிடம் தோல்வியை சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தல் பிரசாரத்தில் தமது குடும்பத்தின் உண்மை பற்றி இணையத்தில் போலியான தகவல்களை பரப்பி, சுயாதீன விசாரணைகளுக்கு முகம்கொடுப்பதை தவிர்க்கும் வகையில் விவாதங்கள் மற்றும் ஏனைய விடயங்களை தவிர்த்ததாக போட்டியாளர்கள் விமர்சித்தனர். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலும் மார்கோஸ் ஜூனியர் கருத்துக் கணிப்புகளிலும் முன்னிலை பெற்றிருந்தார்.

இந்நிலையில் நாட்டின் கடும்போக்கான தலைவர் என்று அழைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடெர்டேவுக்கு பதில் புதிய தலைராக அவர் பதவி ஏற்கவுள்ளார்.

டுடெர்டேவின் போதைக் கடத்தல் மற்றும் பயன்பாட்டுக்கு எதிரான கடும் நடவடிக்கை சர்வதேச அளவில் கடும் விமர்சனத்துக்கு காரணமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவரது இந்த நடவடிக்கையால் பொலிஸ் விசாரணைகள் இன்றி ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவரது மகள் சாரா டுடெர்டே, இந்தத் தேர்தலில் மக்ரோஸ் ஜூனியருடன் சேர்ந்து துணை ஜனாதிபதிக்காக போட்டியிட்டு கணிசமான வாக்குகளை பெற்றிருப்பதாக ஆரம்பக்கட்ட முடிவுகள் தெரிவிக்கின்றன.

## சீன தலைநகரில் கடும் கட்டுப்பாடு



சீனத் தலைநகர் பீஜிங்கில் புதிதாக 60க்கும் அதிகமானோருக்குக் கொவிட்–19 வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை எண்ணிக்கையைப் போல் இது இரண்டு மடங்காகும்.


பீஜிங் கெடுபிடிகளைக் கடுமையாக்கி உள்ளது. வீட்டிலிருந்து வேலை செய்யும்படியும் நகரின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்றும் மக்கள் வலியுறுத்தப்படுகின்றனர்.

அந்தக் கெடுபிடி முடக்கநிலைக்குச் சமமானது என்று மக்கள் கருதுகின்றனர்.

நிதி மையமான ஷங்ஹாயில் புதிதாக 3.000க்கும் அதிகமானோருக்குக் வைரஸ் தொற்று பதிவாகியுள்ளது. ஷங்ஹாயில் ஆறு வாரத்துக்கும் மேலாக முடக்கநிலை நடப்பில் உள்ளது.

## இந்திய ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

### விரைவில் கைச்சாத்தாகும்



இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் விரைவில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்தாகவுள்ளது. இதைத் தொடர்ந்து முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்படும் என்றும் டில்லி பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.


பிரதமர் மோடி சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார். ஜெர்மனிக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த அவர் பின்னர் டென்மார்க் பயணமாக கோபன்ஹேகன் நகருக்கு சென்றிருந்த இந்தியப் பிரதமர் அந்நாட்டு பிரதமர் மெட்பிரெடரிக்சனை சந்தித்து வர்த்தக நடவடிக்கைகளில் இரு நாடுகளும் மேற்கொள்ளக்கூடிய பங்களிப்புகள் பற்றி உரையாடினார். விரைவிலேயே இந்திய ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை செய்துகொள்வதென அங்கு தீர்மானிக்கப்பட்டது.

## சீனாவின் முடக்கத்தால் எண்ணெய் விலை சரிவு

உலகின் மிகப்பெரிய எண்ணெய் இறக்குமதி நாடான சீனாவில் நடப்பில் உள்ள முடக்கநிலை ஏற்படுத்தும் அச்சத்தின் காரணமாக எண்ணெய் விலை சரிந்துள்ளது.

அமெரிக்க மத்திய வங்கி அறிவித்த மிகப்பெரிய வட்டி உயர்வும் எண்ணெய்ச் சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சீனா கடந்த ஆண்டின் முதல் நான்கு மாதத்தோடு ஒப்பிடுகையில் இவ்வாண்டின் முதல் நான்கு



மாதத்தில் வாங்கியுள்ள மசகு எண்ணெயின் அளவு ஐந்து வீதம் குறைவு.

சவூதி அரேபியா ஏற்கனவே ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் ஜூன் மாதம் விநியோகிக்கப் போகும் மசகு எண்ணெயின் விலையைக் குறைதுள்ளது. சீனா வாங்கும் எண்ணெயின் அளவு குறையலாம் என்ற அச்சமே அதற்குக் காரணம்.

எனினும் எண்ணெய் விலை இறக்கம் தற்காலிகமே என்று நிதித்துறை கவனிப்பாளர்கள் கூறுகின்றனர்.

## காஷ்மீரத்து பண்டித பிராமணர்களைப் பற்றிய நாடகம் ஜம்முவில் பலத்த வரவேற்பு

காஷ்மீரத்து பண்டித பிராமண குலத்தை உயர்த்திப் பேசும் ' ஏக் அவுர் பீர்பால்' என்ற நாடகம் ஜம்முவில் அரங்கேற்றப்பட்டபோது கொட்டகை நிறைந்த காட்சிகளாக அந்நாடகத்தை மக்கள் பார்த்து ரசித்தார்கள்.



1812 ஆம் ஆண்டு காலத்தில் காஷ்மீர் ஆப்கானிய மன்னரான அஸிம்கானின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோது அவரது கொடுங்கோல் ஆட்சியை தாழ முடியாத காஷ்மீர் பிராமண சமூகம் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறிச் சென்றனர். அப்போது பீர்பால் தஹார் என்ற பண்டித பிராமணம் லாஹூரில் ஆட்சிசெய்துவந்த அரசர் ரஞ்சித் சிங்கிடம் சென்று அஸிம்பானை விரட்டியடிக்கும்படி கேட்டுக் கொண்டார். இதையடுத்து காஷ்மீர் மீது ரஞ்சித் சிங் படையெடுத்து ஆப்கானிய மன்னரை விரட்டியடித்தார். காஷ்மீர் அல்லாத சிங் இனத்தைச் சேர்ந்தவரிடம் காஷ்மீர் ஆட்சியதிகாரம் சென்றதை விளக்கும் இந்நாடகம் ஜம்முலில் மக்கள் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. காஷ்மீரத்து பண்டித பிராமண சமூகம் தற்போது காஷ்மீரை விட்டு வெளியேறிக் கொண்டிருப்பதாக இந்நாடகத்தில் கூறப்பட்டுள்ளது.

## கலவரத்தில் எரியூட்டப்பட்ட வாகனங்கள்...



படங்கள்: ருக்மல் கமகே, சுலோச்சன கமகே

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 மே 11 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
09 முதல் 14 வரை
சுபஹ் - 04.35
லுஹர் - 12.08
அஸர் - 03.28
மஃரிப் - 06.20
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 28
ராகுகாலம் : பகல் : 12.00 - 01.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: அமிர்த யோகம்
திதி: தசமி



## தரம் 05 புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகள் 20 ஆம் திகதி வெளியீடு

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தயாராகி வருவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பாடசாலை விவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் லலிதா எகொடவெல தெரிவித்துள்ளார். பரீட்சை பெறுபேறுகளின்படி பிரபல பாடசாலைகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான வெட்டுப்புள்ளிகள் நிர்ணயிக்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் ஜனவரி 22ஆம் திகதி நடத்தப்பட்டு மார்ச் 13ஆம் திகதி பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. புலமைப்பரிசில் பரீட்சைக்கு 3,40,508 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்ததுடன் இம்முறை 2,943 பரீட்சை நிலையங்களிலும் 108 விசேட நிலையங்களிலும் நடைபெற்றது.

# 58 சிறைக்கைதிகளை காணவில்லை என புகார்

### சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு




வட்டரெக்க சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்ட 58 சிறைக்கைதிகள் காணாமல்போயுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கைதிகளுக்கான புனர்வாழ்வு திட்டத்தின் ஒரு அங்கமாக இடம்பெறும் வெளிப்புற கட்டுமானப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த குறித்த கைதிகள், நேற்று முன்தினம் மீண்டும் வட்டரக்க சிறைச்சாலைக்கு அழைத்துவரப்பட்டனர்.

அதன்போது, கைதிகள் பயணித்த பேருந்துகள் மீது, ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், அதனையடுத்து, 58 கைதிகள் காணாமல்போயுள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இந்த கைதிகள் தொடர்பான தகவல்களை தெரிந்திருப்பின், சிறைச்சாலை தலைமையகத்துக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ்நிலையத்துக்கோ தகவல் வழங்குமாறு பொதுமக்களிடம் சிறைச்சாலை தலைமையகம் கோரியுள்ளது.

## முதல் குற்றவாளி அவரே அவரை உடன் கைது செய்க

### SJB செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார



அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்திய முதல் குற்றவாளி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்பதால் அவரை உடனடியாக கைது செய்து சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் உள்ளிட்ட அரசு பதவி விலகும் வரை ஐக்கிய மக்கள் சக்தி இனி வரும் காலங்களில் எந்த ஒரு கலந்துரையாடல் அல்லது வேலைத்திட்டங்களுக்கும் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

08

## ஞானக்காவின் கோவில், ஹோட்டல், வீடு தீக்கிரை

### நேற்று அதிகாலை மக்களால் முற்றுகை

பொதுஜன பெரமுனவின் ஆதரவாளரும் அவர்களின் ஆஸ்தான சோதிடருமான அநுராதபுரத்திலுள்ள ஞானக்காவின் வீடு, கோவில், ஹோட்டல் என்பன மக்களால் முற்றுகையிடப்பட்டு தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக அனுராதபுரம், இசுருபுர பிரதேசத்தில் உள்ள ஞானக்கா என்ற பெண்ணின் வீட்டின் முன் எதிர்ப்பாளர்கள் நெருங்கும் அபாயம் காரணமாக கிட்டத்தட்ட 200 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும், நேற்று (10) அதிகாலை ஒரு மணியளவில் ஞானக்காவின் வீடு தாக்குதலுக்குள்ளானது.

அங்கு படையினர் முதலில் வீட்டைப் பாதுகாக்க முயன்றனர். ஆனால் பின்னர் ஞானக்காவின் வீட்டைச் சுற்றியுள்ள

08



### ஜனநாயக நடைமுறைகள் மூலமான

## இலங்கை மக்களின் சிறந்த நலன்களை அடிப்படையாக கொண்டே இந்தியா உதவும்

ஜனநாயக நடைமுறைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இலங்கை மக்களின் சிறந்த நலன்களை அடிப்படையாக கொண்டே இந்தியா செயற்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.


இலங்கை தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரின்டம் பக்சி இதனை தெரிவித்துள்ளார்.

வரலாற்று தொடர்புகளை கொண்ட இலங்கையின் நெருங்கிய அயல்நாடு என்ற அடிப்படையில் இந்தியா இலங்கையின் ஜனநாயக ஸ்திரதன்மை பொருளதார மீட்சி ஆகியவற்றிற்கு முழுமையாக ஆதரவளிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அயல்நாடுகளிற்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா இந்த வருடம் மாத்திரம் இலங்கை மக்கள் தங்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக 3.5 பில்லியன் டொலர்களிற்கு மேல் உதவி வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். இதுதவிர மருந்து உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறைகளிற்கு தீர்வை காண்பதற்காக இந்திய மக்கள் உதவிகளை வழங்கியுள்ளனர். ஜனநாயக நடைமுறைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இலங்கை மக்களின் சிறந்த நலன்களை அடிப்படையாக கொண்டே இந்தியா செயற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.



## திருகோணமலை கடற்படை முகாமை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம்



திருகோணமலை கடற்படை முகாமை முற்றுகையிட்டு பொது மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற் படை தளத்திற்குள் உள்ளே இருக்கும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரை வெளியேற்றுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸ் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையிலும் கூட மக்கள் விரக்தியால் வீதிக்கு இறங்கியுள்ளனர்.இதன் காரணமாக அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நேற்று முன்தினம் இரவு முதல் திருகோணமலை சீனக்குடா விமான நிலையத்தை நோக்கி விமானங்கள் அதிகமாக பறந்ததால் திருகோணமலைக்கே மஹிந்த குடும்பம் தஞ்சம் அடைந்திருக்கலாம் எனவும் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## மத்திய வங்கி ஆளுநர், திறைசேரியின் செயலாளருடன் சஜித் அவசர சந்திப்பு



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தற்போதைய பொருளாதார நெருக்கடி மீட்சி தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். இந்த கலந்துரையாடலில் திறைசேரியின் செயலாளர் கே.எம்.எம்.சிறிவர்தனவும் உடனிருந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். இது குறித்து டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டுள்ள

08

### முப்படை மற்றும் பொலிஸாருக்கு

## நாட்டில் அமைதியை ஏற்படுத்த உதவுங்கள்

### மக்களிடம் இராணுவத் தளபதி கோரிக்கை



முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி, நாட்டில் அமைதியை ஏற்படுத்த உதவி செய்யுமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு முப்படைகளும் பொலிஸாரும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனவே இக்காலப்பகுதிக்குள் சட்டத்தை மதித்து செயற்பட வேண்டியது நாட்டு மக்களின் பொறுப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம்: மோதல்களுக்குப் பின் நேற்று மீண்டும் கூடாரங்கள் அமைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

காலிமுகத்திடலில் இடம்பெற்று வரும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் 32வது தினமாகவும் நேற்று நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களில் தாக்குதலுக்குள்ளாகி தகர்க்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்கள், நூலகம் மற்றும் வெளியரங்க மேடை ஆகியவற்றை தற்காலிகமாக அமைக்கும் நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு கோஷங்களுடன் நேற்றைய தினமும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதுடன் நேற்று முன்தினம் அங்கு இடம்பெற்ற சம்பவங்களின் பின்னர் நேற்று அப்பகுதியில் அமைதி சூழ்நிலை நிலவியதைக் காணமுடிந்தது.

08

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 254.11 | 270.56 |
| கனடியன் டொலர் | 280.80 | 293.66 |
| யூரோ | 385.44 | 400.93 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 447.93 | 467.19 |
| சுவிஸ் பிராங்க் | 367.15 | 380.95 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 967.44 | கட்டார் ரியால் | 99.57 |
| குவைத் டினார் | 1,188.72 | சவூதி ரியால் | 97.24 |
| ஓமான் ரியால் | 947.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |


தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 28ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 09


## குறள் தரும் சிந்தனை



ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை

எல்லை கடந்த செலவு இல்லாமல்
இருக்குமேயானால் வரவு, குறைவாக
இருப்பதால் கேடு எதுவும் விளைவதில்லை.

# பொருளாதார நெருக்கடிக்கு கலவரம், வன்முறை தீர்வாகாது

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தற்போதைய சூழலில் இந்நெருக்கடியின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள அரசியல் நெருக்கடி கொதிநிலையை அடைந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தையும் பாதிப்புக்களையும் நாட்டின் அனைத்து மக்களும் எதிர்கொண்டுள்ளனர். இந்நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் நெருக்கடியும் தொடரவே செய்கின்றன.

இதேநேரம் இந்நெருக்கடி தீர்வு காணுமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் தொழிற் நடவடிக்கைளும் முன்னெடுக்கின்றன. இந்நடவடிக்கைகளில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளின் ஓரங்கமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியை நேற்று முன்தினம் (09 ஆம் திகதி) இராஜினாமாச் செய்தார். அவரது இராஜினாமாவைத் தொடர்ந்து அமைச்சரவையும் கலைந்துள்ளது.

ஆன போதிலும் நாடு தற்போது முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கமொன்றை அமைத்து தீர்வு தேடும் நடவடிக்கையின் அடிப்படையில், கடந்த ஏப்ரல் மாதத்தின் ஆரம்பத்தில் ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையிலான அமைச்சரவை இராஜினாமாச் செய்தது. ஆனாலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இந்த யோசனையை நிராகரித்தன. அதனால் நாட்டின் அரசியல் நிலைமையைக் கருத்தில் கொண்டு புதிய அமைச்சரவையொன்றை கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதி நியமித்தார். ஆனால் பொருளாதார நெருக்கடியோ அரசியல் நெருக்கடியோ தணிந்ததாக இல்லை.

இந்த நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது பதவியை இராஜினாமா செய்ததோடு அமைச்சரவையும் கலைந்துள்ளது. அதன் காரணத்தினால் நாட்டின் அரசியல் கொதிநிலை மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு தேடும் நோக்கில் சர்வமதத் தலைவர்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார். இதேவேளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாராளுமன்றத்தை விரைவாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவது இந்நாட்டு குடிமக்களின் பொறுப்பாகும். இருந்த போதிலும் நேற்றுமுன்தினம் (09ஆம் திகதி) பிரதமருக்கு ஆதரவு தெரிவிக்க கொழும்பு வந்த

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் அலரி மாளிகைக்கு முன்பாகவும், காலிமுகத்திடலிலும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது வன்முறையுடன் கூடிய கலவரத்தில் ஈடுபட்டதால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கலவரங்களும் வன்முறைகளும் பரவ வித்திட்டுள்ளன.

இதன் விளைவாக 230 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுள்ளனர். அத்தோடு ஶ்ரீ.பொ.பெ. கட்சியின் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள உட்பட 08 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவை மாத்திரமல்லாமல் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லம், அவரது மெதமுலன பூர்வீக இல்லம், டி.ஏ. ராஜபக்ஷ அருங்காட்சியகம், சில முன்னாள் அமைச்சர்களதும், ஶ்ரீ.ல.பொ.பெரமுன கட்சியைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதிகளதும், உள்ளூராட்சி மன்றங்களது முக்கியஸ்தர்களதும் வீடுகள், சொத்துக்கள் தேசப்படுத்தப்பட்டு தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன. அத்தோடு பிரதமருக்கு ஆதரவு தெரிவிக்க அலரி மாளிகைக்கு அழைத்து வரப்பட்டவர்கள் பயணம் செய்த பஸ் வண்டிகள் உள்ளிட்ட வாகனங்கள் பலவும் உள்ளூராட்சி மன்றங்களது சொத்துகளும் சேதப்படுத்தப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இவ்வாறான சூழலில் இவ்விதமான அழிவுகளும் சேதங்களும் எவ்விதத்திலும் நியாயப்படுத்தக் கூடியவை அல்ல. இவ்விதமான அழிவுகளுக்கும் சேதங்களுக்கும் வித்திட்ட மூலகர்த்தாக்கள் உள்ளிட்ட சட்டத்தைக் கையில் எடுத்து கலவரத்தில் ஈடுபட்ட அனைவரும் சட்டத்தின் முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும். அதுவே அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அதேநேரம் இவ்விதமான அழிவுகளும் சேதங்களும் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக அமையாது. அவை நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே வழிவகுக்கும். நாட்டின் நற்பெயருக்கும் களங்கத்தையும் ஏற்படுத்தும்.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி அனைத்து பிரஜைகளும் பொறுப்புடனும் முன்னவதானதுடனும் செயற்பட வேண்டும். அதுவே நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு ஆக்கபூர்வமான தீர்வைப் பெற்றுத்தரக்கூடியதாக அமையும். இன்றைய அவரசத் தேவையும் அதுதான்.

editor.tkn@lakehouse.lk


# சாமிமலை பகுதியில் தொடர் கோவில் உடைப்பு சம்பவங்கள்

மஸ்கெலியா பொலிஸ் பகுதியில் சாமிமலையில் கடந்த சில மாதங்களாக கோவில்கள் உடைக்கப்பட்டு நகைகள், ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு திருடப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த வருடம் சாமிமலை கவரவில தோட்ட ஶ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு ஆலய உண்டியல் நகைகள் களவாடப்பட்டன. இது குறித்து மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







## குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்களா?

மேலும் இதேபோன்றதொரு சம்பவம் கடந்த (28/ 03/ 2022 )சாமிமலை பாக்றோ தோட்டத்தில் பதிவாகியுள்ள நிலையில் அன்றைய தினமும் ஆலய நிர்வாக சபையினரால் மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் சந்தேகத்தின் பேரில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில்

(2022.05.07) இரவு சாமிமலை கிலனுஜி தோட்டத்தில் அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு அம்மன் சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க மாலை உண்டியல் என்பன திருடப்பட்டிருந்தன.

இது குறித்து இம் மாதம் (8) காலை ஆலய நிர்வாக சபையினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டமையை தொடர்ந்து துரித கதியில் செயல்பட்ட பொலிஸார் ஆலய நிர்வாக சபை மட்டும் ஆலய பூசகர் ஆகியோரிடம் முறைப்பாடு பதிவு செய்தனர். அதன்பிறகு சம்பவ இடத்துக்கு ஹற்றன் பிரிவு தடயவியல் அதிகாரிகளும் மோப்ப நாயும் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த தொடர்ச்சியான ஆலய உடைப்பு சம்பவங்கள் பிற மதங்களின் பெயரில் இடம்பெறுவதாக விசமப்பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டு பிரதேச மக்களை குழப்பும் சில கூட்டங்கள் கிளம்பினாலும் அது எடுபடவில்லை. இவ்வாறான தொடர் கோயிலை உடைத்து திருடப்படும் சம்பவங்கள் சில நாசகார குழுக்களால் முன்னெடுக்கப்படுவதாகவும் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் இவ்வாறான அனைத்து கேள்விகளுக்கும் இதுவரை விடைகிடைக்கவில்லை. சம்பவங்களின் மூல வேர்களை அறுத்தெறியும் பொறுப்பு பொலிஸாருக்குரியதாகும். ஆனால் மஸ்கெலியா பொலிஸார் மௌனம் காப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஞானராஜ்...

# மகளிருக்கு இலவசப் பயண திட்டம்

தமிழக முதல்வராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு கையெழுத்திட்ட 5 திட்டங்களில் ஒன்றான, சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயண திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றுள்ளது.

பல்வேறு விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் மகளிரின் ஏகோபித்த ஆதரவுக்கும் இடையே தொடங்கப்பட்ட இந்த திட்டத்தால் இதுவரை பயன்பெற்ற மகளிரின் எண்ணிக்கை 115 கோடி என்கிறது தரவுகள்.

தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்று, ஓராண்டு நிறைவடைந்து, இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

2021ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதி தமிழக முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டதும் தலைமைச் செயலகம் வந்த முதல்வர் மு.க. ஸ்டாலின், திமுக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாகவும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் ஐந்தினைச் செயல்படுத்தும் விதமாகவும் ஐந்து உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

அதில் ஒன்றுதான் சாதாரண கட்டணப் பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் என்பதாகும். மகளிருக்கு நகர கட்டணப் பேருந்துகளில் இலவச பயணம் செய்வதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு மே 7ஆம் தேதியன்றே வெளியிட்டது.

தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்யலாம் என்று அந்த ஆணையில் கூறப்பட்டிருந்தது.

மறுநாளே நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம் மகளிருக்கு சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் இலவச பயண திட்டம் மே 7ஆம் தேதி அறிவிக்கப்பட்டு, அன்றைய நாளே அரசாணை வெளியிடப்பட்டு மறுநாளே (மே 8) நடைமுறைக்கு வந்தது. இரவோடு இரவாக பேருந்துகளில் 'மகளிர் பயணம் செய்ய கட்டணமில்லை' என்ற ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு மிகவேகமாக பயன்பாட்டுக்கு வந்தது இந்த திட்டம்.

மே 8ம் தேதி காலை சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் ஏறிய பெண்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். ஏழை, எளிய பெண்களுக்கு இந்த திட்டம் பேருதவியாக அமைந்தது. வேலைக்குச் செல்லும் மகளிரால் கொண்டாடப்பட்டது.

பெண்களின் இலவச பயணத்தையும் ஒழுங்குப்படுத்தி, அதன் தரவுகளை வைத்திருக்க விரும்பிய தமிழக அரசு, தனியாக மகளிருக்கு இலவச பயணம் என்று குறிப்பிட்டு டிக்கெட்டுகளையும் அச்சடித்து வழங்கியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இந்த திட்டம் தொடங்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்திருக்கும் நிலையில் அந்த திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட்டது. அதனால் பயன்பெற்றோர் எத்தனை பேர் என்ற தரவுகள் கிடைத்துள்ளன.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, தமிழ்நாட்டில் இயக்கப்படும் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 876. அதில், மாநில அரசு சார்பில் இயக்கப்படும் பேருந்துகள் 20 ஆயிரத்து 926. தனியாரால் இயக்கப்படுபவை 7 ஆயிரத்து 858. சிறிய பேருந்துகள் 4 ஆயிரத்து 92.





**தமிழக முதல்வரின் ஓராண்டின் நிறைவில் 115 கோடி பெண்கள் பயன்பெற்றுள்ளனர்**

அதன்படி, இலவச பயணத் திட்டத்துக்காக 7 ஆயிரத்து 321 சாதாரண பேருந்துகள் இயக்கப்பட்டன. இதில், நாளொன்றுக்கு 36 இலட்சம் பெண்கள் பயணம் செய்துள்ளனர். ஏப்ரல் மாதம் இறுதி வரையில் சுமார் 115 கோடி பெண்கள் பயணித்துள்ளனர். இந்தத் திட்டத்துக்காக ஆண்டுக்கு ரூ.1,500 கோடி அளவில் செலவிடப்படுகிறது என்கிறது புள்ளிவிவரங்கள். இலவச பயணம் ஏன்?

2021ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான முதல்வரின் தேர்தல் அறிக்கையில், தமிழகம் முழுவதும் இலவசமாக உள்ளூர்ப் பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பயண வசதி அளிக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். தற்போது மாறி வரும் சமூக, பொருளாதார சூழலில், பெண்கள் உயா்கல்வி பெறுவதற்கும், குடும்பத்தின் பொருளாதார தேவையை நிறைவேற்றும் பொருட்டு பணிகளுக்குச் செல்வதற்கும், சுயதொழில் புரிவதற்கும் போக்குவரத்துத் தேவை இன்றியமையாததாகும்.

உயர்கல்வி கற்பதற்காகவும், பணிநிமித்தமாகவும், பயணம் மேற்கொள்ளும் பெண்களுக்கு பாதுகாப்பான பயணங்களை அமைத்துக் கொடுப்பதும், பொதுப் போக்குவரத்து பயணங்களை ஊக்குவிப்பதும், பெண்களின் சமூகப் பொருளாதாரத் தேவைக்கு உகந்ததாக அமையும்.

# உக்ரைன் போரில் அடுத்து என்ன?

உக்ரைன் நாட்டில் தொடங்கிய போர் 2 மாதங்களைக் கடந்து தொடரும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடின் சில முக்கிய கருத்துகளைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அமைதி பேச்சுவார்த்தையில் இரு தரப்பிற்கும் இடையே உடன்பாடு ஏற்பட்ட சமயத்தில் சண்டை சற்றே ஓய்ந்திருந்தது. இருப்பினும், இந்த சில வாரங்களிலேயே இரு தரப்பிற்கும் இடையே மீண்டும் போர் தீவிரமடைந்துவிட்டது.


உக்ரைன் நாட்டில் உள்ள முக்கிய நகரங்களைக் குறி வைத்து ரஷ்யா மீண்டும் தாக்குதல் நடத்தி வருகிறது. ஏற்கனவே, மரியுபோல் நகரை ரஷ்யா முழுமையாகத் தன்வசப்படுத்தியது. அதேபோல சமீபத்தில் உக்ரைன் கிராமத்தில் உள்ள பள்ளி ஒன்றில் ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இதில் சுமார் 60க்கும் மேற்பட்டோர் பலியாகினர். இதுபோன்ற தாக்குதல்கள் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், போர் முடியாமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இதனிடையே ரஷ்ய பாதுகாப்புப் படை வீரர்களிடையே உரையாற்றிய ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியன் வீரர்களின் தியாகத்தையும் வீரத்தையும் நினைவுகூர்ந்தார். அதேபோல உக்ரைன் போரிலும் ரஷ்ய இராணுவம் வெற்றியை நோக்கி முன்னேற வேண்டும் என வலியுறுத்தினார்.

அதேநேரம் உக்ரைன் போரில் உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் வீரத்தையும் குறிப்பிட்ட புடின், உயிரிழந்த வீரர்களின் குடும்பங்களுக்கு ரஷ்ய அரசு நிச்சயம் உதவும் என்று தெரிவித்தார்.

நாஜி ஜெர்மனிக்கு எதிரான வெற்றியின் 77வது ஆண்டு விழாவில் ரஷ்யாவின் ரெட் சதுக்கத்தில் நடைபெற்றது.



**ரஷ்ய ஜனாதிபதி புடின் சில முக்கிய கருத்து**

அதில் கலந்து கொண்ட பெருந்திரளான பாதுகாப்புப் படையினருக்கு மத்தியில் உரையாற்றிய புதின், "ரஷ்யாவைப் பலவீனப்படுத்துவதற்கும் பிளவுபடுத்துவதற்கும் அந்நிய சக்திகள் முயன்று வருகின்றன. அது ஒருபோதும் இங்கே நிறைவேறாது. நேட்டோ படையினர் நமது எல்லைக்கு அருகே அச்சுறுத்தல்களை புதுப் புது அச்சுறுத்தல்களை உருவாக்குகிறது. அதை முறியடிப்போம்" என்றார்.

உக்ரைனின் டான்பாஸ் பகுதியில் போரிடும் வீரர்களிடம் நேரடியாகப் பேசிய அவர்,

(உக்ரைன்) கட்டுப்பாட்டில் இருந்து விரைவில் டான்பாஸ் பகுதி விடுவிக்கப்படும். இரண்டாம் உலகப் போரில் கற்றதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் அனைவரும் தாய்நாட்டிற்காக, அதன் எதிர்காலத்திற்காகப் போராடுகிறோம். இங்குக் கொலையாளிகள், வன்முறையாளர்கள் நாஜிக்களுக்கு இடமில்லை. இந்த போரில் உயிரிழந்த ரஷ்ய வீரர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாதது" என்றும் அவர் தெரிவித்தார்.

போர் ஆரம்பித்து 75 நாட்கள் ஆகும் நிலையில், ரஷ்ய அதிபர் புட்டினின் இந்த 11 நிமிட பேச்சு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. இந்த பேச்சில் புட்டின் எந்த இடத்திலும் உக்ரைனின் பெயரை நேரடியாகக் குறிப்பிடவில்லை.

# கோல்பேஸில் கொழுந்து விட்டெரிந்த தீ முழு நாட்டையும் நாசப்படுத்தியது

**கொழும்பு கோல்பேஸ் பகுதியில் நேற்றுமுன் தினம் எதிர்பாராத வன்முறை சம்பவங்களால் நாடு பெரும் அழிவை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொது சொத்துக்கள் மற்றும் தனியார் சொத்துக்கள், வாகனங்களுக்கு பெரும் பாதிப்பும் அழிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு பிரிவினரால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்களின் அத்துமீறல்கள் நடந்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல் மற்றும் கட்டுக்கடங்காத நிலை உயர்ந்து செல்லும் விலைவாசி,எரிபொருள், சமயல் எரிவாயு தட்டுப்பாடு, இவற்றுக்காக நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருப்பது போன்ற பல காரணங்கள் இவ்வாறான வன்முறைகளுக்கு காரணமாக அமைந்திக்கலாம்.**







நடந்த வன்முறையில் ஆளுங்கட்சி எம்.பி. ஒருவர், பொலிஸார் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர். 235 பேர் காயமடைந்தனர். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வீடு உள்ளிட்ட அரசியல்வாதிகளின் வீடுகள் பலவும் தாக்குதலுக்கு உள்ளாகி தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

திங்கள் இரவு, அரசுக்கு எதிராக போராடிய மக்கள் கொழும்பில் உள்ள பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லத்தை சூழ்ந்து கொண்டு முற்றுகையிட முயன்றதால் பதற்றம் ஏற்பட்டது. அவர்கள் அங்கேயிருந்த வாகனங்களை எரித்தனர்.

வன்முறை ஆரம்பமான சந்தர்ப்பத்தில் அலரி மாளிகை, காலி முகத்திடல், யூனியன் பிளேஸ், கொம்பனித் தெரு, கங்காராமா விகாரை ஆகிய பகுதிகளில் ஆவேசமடைந்த கும்பல்கள் குழுமியிருந்தன.

அலரி மாளிகை அமைந்திருக்கும் வீதியில் கோசங்களை எழுப்பியபடி பலர் கம்புகளுடன் வாகனங்களை மறித்துக் கொண்டிருந்தனர்.

அரசுத் தரப்பு ஆதரவாளர்கள், எதிர்ப்பாளர்கள் என இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதலை பல பகுதிகளில் காண முடிந்தது.

பல பேருந்துகள் அடித்து உடைக்கப்பட்டிருந்தன. வாகனங்கள் தீவைத்து எரிக்கப்பட்டன. தலையிலும் முகத்திலும் இரத்தக் காயங்களுடன் பலரை காணக்கிடைத்தது.

பல சொகுசு கார்கள் மற்றும் கெப் வண்டிகளை மக்கள் சிலர் கங்காராமா மகாவிகாரை ஒட்டி அமைந்திருக்கும் ஏரிக்குள் தள்ளினர். ஒரு பேருந்தையும் தள்ளுவதற்கு முயற்சி செய்தார்கள். சுற்றிலும் காவல்துறையினர் இருந்தபோதும் அவர்களால் ஏதும் செய்ய இயலாத அளவுக்கு பெரும்கூட்டம் அந்தப் பகுதியில் ஆவேசமாக நின்று கொண்டிருந்தது.

கம்புகளை வைத்திருந்தவர்கள், சாலையில் செல்லும் கார்களை மடக்கி, யார் என்று விசாரித்து அறிந்த பிறகே தொடர்ந்து போக அனுமதித்தனர். வாகனத்துக்குள் இருந்தபடியே புகைப்படம் எடுப்பதையோ, வாகனத்தை விட்டு இறங்குவதையோ அவர்கள் அனுமதிக்கவில்லை. இதனால் அனேக அசம்பாவிதங்கள் தெரியவரவில்லை.

காலி முகத்திடலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் என்று கூறிக் கொண்டு புகுந்தவர்கள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்தே இந்த வன்முறையானது கொழும்பு நகர் மாத்திரமல்லாமல், நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

திங்கட்கிழமையன்று காலையில் பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லமான அலரி மாளிகையில் அவரது ஆதரவாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடி அவருக்கு ஆதரவான முழக்கங்களை எழுப்பினார்கள்.

பின்னர் அலரி மாளிகைக்கு வெளியே வந்து அரசுக்கு எதிரான போராட்டம் நடக்கும் காலி முகத்திடல் பகுதிக்கு தாங்கள் செல்லப் போவதாக அறிவித்து அதை நோக்கிச் சென்றனர்.

வழியிலேயே அவர்களைத் தடுப்பதற்கு காவல்துறையினர் முயன்றாலும், தடுப்புகளையும் தாண்டி அவர்கள் போராட்டம் நடக்கும் காலி முகத்திடல் பகுதிக்கு வந்து அங்கு போராட்டக்காரர்கள் அமைத்திருக்கும் கூடாரங்கள் மீது தாக்குதல் நடத்தி கூடாரங்களை உடைத்து தீயிட்டு கொளுத்தினர்.

அந்தத் தருணத்தில் இருதரப்பு மோதல் ஏற்பட்டு போராட்டக்காரர்களும் அலரி மாளிகையில் இருந்து வந்தவர்களும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர்.அப்போது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி நீரைதாரை அடித்து ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க முற்பட்டனர். சுமார் இரண்டு மணி நேரம் வரை காலி முகத்திடல் பகுதி வன்முறை களமாகக் காட்சியளித்தது. அப்பகுதிக்கு வருகை தந்த ஜே,வி.பி தலைவர் அனுரகுமாரதிசாநாயக்கவுக்கு ஆர்ப்பாட்டக்காரர்காளால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டபோதும் அங்கு வந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் தாக்குதல் நடத்தப்பட்டது.



கோல்பேஸ் பகுதியில் பதற்றம் தணிந்தபோதும் கொழும்பு நகரின் பிற பகுதிகளிலும் நாட்டின் பிற பகுதிகளிலும் கலவரம் வெடித்து பொதுஜன பெரமுன கட்சி அமைச்சர்கள், எம்.பிக்கள், பிரதேச, மாகாண சபை உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் சொத்துகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டது.

பொதுஜன பெரமுன கட்சி பொலன்னறுவை மாவட்ட எம்.பியான அமரகீர்த்தி அதுகோரளாவை நிட்டம்புவையில் போராட்டக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர்.அப்போது, அதுகோரளவின் வாகனத்தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும், இதனால் கோபமடைந்த போராட்டக்காரர்கள் அவரது வாகனத்தை தாக்கி கவிழ்த்ததாகவும் கூறப்படுகிறது.

போராட்டக்காரர்களிடம் இருந்து தப்பிக்க அதுகோரளாவும் அவரது பாதுகாவலரும் அருகே உள்ள கட்டடத்தில் தஞ்சமடைந்ததாகவும், அந்தக் கட்டடத்தை போராட்டக்காரர்கள் சூழ்ந்த நிலையில் அதுகோரளாவும் அவரது பாதுகாவலரும் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆனால் அவர்களது சடலங்களை கூட போராட்டக்காரர்கள் எடுக்கவிடவில்லை. பல மணி நேரங்களுக்கு பின்னரே பொலிஸார் சடலங்களை எடுத்துச் சென்றுள்ளர்.

தங்கல்லையில் அமைக்கப்பட்டுள்ள அமரர் டி.ஏ.ராஜபக்ஷவின் தூதனசாலை உடைக்கப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது. அத்தோடு மஹிந்த ராஜபக்ஷவின் மெதமுலன வீட்டுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதோடு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இந்த வன்முறை, காட்டுமீராண்டி செயல்களால் எந்த பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பதே யதார்த்தபூர்வமான உண்மையாகும். மக்கள் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து கொள்வதே சிறந்த நடைமுறையாகும்.

## போராட்டக்காரர்களால் பொது, தனியார் உடமைகளுக்கு பாரிய சேதம்; இயல்பு வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பு, ஊரடங்கால் கலவரங்கள் தணிவு

இதுவரை எரிக்கப்பட்டவையின் விபரம்...

1. சனத் நிஷாந்தவின் வீடு
2. திஸ்ஸ குட்டி ஆராச்சியின் வீடு
3. குருநாகல் மேயர் மாளிகை
4. ஜோன்ஸ்டன் வீடு மற்றும் அலுவலகம்
5. மொரட்டுவை மேயர் மாளிகை
6. எம்.பி அனுஷா பாஸ்குவலின் வீடு
7. பிரசன்ன ரணதுங்கவின் வீடு
8. ரமேஷ் பத்திரனவின் வீடு
9. சாந்த பண்டாரவின் வீடு
10. ராஜபக்ஷ பெற்றோரின் நூதனசாலை
11. நீர்கொழும்பில் உள்ள அவென்ரா கார்டன் ஹோட்டல்
12. அருந்திகாவின் வீடு
13. கனக ஹேரத்தின் வீடு
14. காமினி லொகுகேவின் வீடு
15. காலியில் உள்ள ரமேஷ் பத்திரனவின் வீடு
16. லான்சாவின் 2 வீடுகள்
17. வென்னப்புவ நைனாமடம் ட்ரெவின் பெர்னாண்டோ வீடு
18. பந்துல குணவர்தன வீடு
19. வீரகெட்டிய மெதமுலன வீடு
20. கேகல்ல மஹிபால ஹேரத் வீடு
21. கொட்டிகாவத்தை ரேணுகா பெரேரா இல்லம்
22. கம்பஹா நாலக கொடஹேவா வீடு
23. விமல் வீரவன்சவின் வீடு
24. அசோசியேட் சூப்பர் சென்டர் காலி
25. சிறிபாலகம்லத் வீடு
26. கெஹலிய ரபுக்வெல்ல வீடு
27. ரோஹித அபேகுணவர்தனவின் வீடு
28. நீர்கொழும்பு குரான கிராண்டீசா ஹோட்டல்
29. கஞ்சன விஜேசேகர இல்லம்
30. துமிந்த திசாநாயக்கவின் வீடு
31. அலி சப்ரி ரஹீமின் வீடு புத்தளம்
32. வீரசிங்கவின் வீடு அம்பாறை
33. சமல் ராஜபக்ஷவின் வீடுதெபரவெவ
34. எஸ்.பி.திஸாநாக்கவின் நுவரெலியா வீடு
35. விதுர விக்கிரமநாயக்கவின் வீடு
36. கபில அத்துகோரலவின் திருகோணமலை வீடு





# இலக்கியப்பரப்பில் சமூக மேம்பாட்டு பணிகளுக்காக உழைக்கும் கலைஞன்



**'அக்கரைப்பற்று நஜுமு' எனும் பெயரில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இலக்கியப் பணியாற்றிவரும், கலாபூஷணம் எம். ஏ. நஜுமுதீன், ஆளுமையுள்ள படைப்பிலக்கியகர்த்தா. இவர் ஆத்மீக தத்துவங்களின் நிழலாகவும், இலக்கியப் பரப்பில் சக்திமிக்கவராகவும் திகழ்பர்.**

இலக்கியத்தால், சமூகமேம்பாட்டுக்கான பணிகளை முன்னெடுக்க முடியுமென்ற நம்பிக்கையில் இவரது எழுத்துக்கள் தடம் பதித்து வருகின்றன.

புத்தசாசன மற்றும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் தேசிய ரீதியான ஆக்க இலக்கியப் போட்டிகளில் (2021) இவரது கவிதை, சிறுகதை என்பன முதன்மைப் பரிசுகளை வென்று சாதனை படைத்துள்ளது. அரசாங்க ஊழியர் மற்றும் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கிடையில் இப்போட்டிகள் நடத்தப்பட்டன. இதில், ஓய்வுபெற்ற அரசுப் பணியாளரான அக்கரைப்பற்று நஜுமுக்கு கடந்த 23.03.2022 இல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விருதுகள் வழங்கப்பட்டதுடன், நற்சான்றிதழ்களும், ரூபா ஐம்பதினாயிரம் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டு கௌரவம் வழங்கப்பட்டது. இதனால், இவரது பிறப்பிடமான அக்கரைப்பற்று பெருமயடைவதாக இலக்கிய ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரபல்யத்தில் அதிக அக்கறை கொள்ளாது தனது இலக்கிய முயற்சிகளை அமைதியாக முன்னெடுக்கும் இவரது படைப்புக்கள், இளைய தலைமுறையினரிடத்திலும் வரவேற்பு பெற்று வருகிறது.18ஆவது வயதில் தினபதியிலும் அதனைத் தொடர்ந்து தினகரன், சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளிலும் அக்கரைப்பற்று நஜ்முவின் படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

1980 இல் நடாத்தப்பட்ட அம்பாறை மாவட்ட வளர்ந்தோருக்கான சிறுகதைப் போட்டி, நீதி அமைச்சின் மத்தியஸ்த சபை உத்தியோகத்தர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட தேசிய ரீதியான கவிதைப்போட்டி, மலர் சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டி மற்றும் அஷ்ரஃப் ஞாபகார்த்த தேசிய ரீதியான கவிதைப் போட்டிகளிலும் இவரது படைப்புக்கள் முதன் மூன்றாமிடங்களைப் பெற்றுக்கொண்டன.

இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் நடாத்திய (2016) உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு பொன்விழா மாநாட்டில்,அக்கரைப்பற்று நஜுமுவின் இலக்கியப்பணிகள் கௌரவிக்கப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. இதற்காக இவருக்கு அக்கரைப்பற்று மண்ணில் "உயர்ந்த மண்" விருதும் வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று மாநகரின் நுழைவாயிலில் கம்பீரமாக எழுந்து நிற்கும் வரவேற்பு தோரணத்தில் (Gate Way) இடம் பெற்றிருக்கும் உயிர்ப்பு மிக்க செம்மொழி வசனங்களும் இவரது கைவண்ணங்களே.

ஓய்வு பெற்ற போதும் சமூகமேம்பாட்டுக்காக உணர்வுபூர்வமாக உழைத்துவரும் மனிதநேய கலைஞரான அக்கரைப்பற்று நஜ்மு, அக்கரைப்பற்றின் பிரபல்ய சமூகசேவை இயக்கமான ஏ,எஸ். கழகத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும், மத்தியஸ்த ஓய்வூதிய சங்கத் தலைவராகவும், கலாசார மத்திய நிலைய உப தலைவராகவும் அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் உயர்பீட உறுப்பினராகவும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்.

இலக்கியத்திற்கான அரச தேசிய விருதான 'கலாபூஷணம்'விருதை 2016ல் பெற்றுக் கொண்ட இவரது படைப்புக்கள் ,ஜனரஞ்ஜகமானதுதான். மனிதனின் ஆழமான உணர்வுகளையும் அதன் வெளிப்பாடுகளையும் புரிந்துகொள்ளும் ஒரு கலைஞன், தனது ஆளுமையுடன் அவற்றை இலக்கியமாக்குகின்றான். இவை, காலம் கடந்தும் வாழுமென்பதே கலைஞர்களின் எதிர்பார்ப்பாகும்.

தகவல்: **அக்கரையூரான்...**




# அசாதாரண சூழ்நிலையினால் அத்தியாவசிய பொருட்கள் வருவதில் தாமதம் ஏற்படலாம்

## மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன்

**யாழ். விசேட நிருபர்**

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக அத்தியாவசிய பொருட்களை எடுத்து வருவதில் தாமதங்கள் ஏற்படலாம். எனவே யாழ்.வர்த்தகர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்புடன் செயற்பட்ட வேண்டும் என யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய நிலையில் பொருட்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதனை வர்த்தகர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்க்கவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

"சில இடங்களில் வர்த்தகர்கள் பொருட்களை பதுக்குதல் மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அவை தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை கண்காணிப்புகளை மேற்கொள்ளும். தென்னிலங்கையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவது ஒரு வாரம் தாமதமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்களை பகிர்ந்து விற்பனை செய்வது தொடர்பிலும் தற்போதைய நிலையை எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பிலும் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக சங்கங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு மின்சார சபை ஊழியர் மீது தாக்குதல்





முல்லைத்தீவு மின்சார சபை ஊழியர் ஒருவர் உட்பட மூவர் மீது மாமூலை பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமூலை பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மின்பட்டியல் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மின்சார சபை ஊழியர் ஒருவர் மீது மூர்க்கத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து தாக்குதலுக்குள்ளான மின்சார சபை ஊழியர் தன்னுடைய அலுவலகத்துக்கு தகவல் வழங்கி முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் நேற்று காலை (10.05.2022) கைது செய்யபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

தொடர்ச்சியாக பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட பல வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் அறிய முடிகின்றது.

# கீரி கடித்தமையால் வயோதிப பெண் மரணம்

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

கீரி கடித்தமையால் வயோதிப பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இவர் உயிரிழந்துள்ளார். இதுதொடர்பில் அவரது மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புற்றளை, புலோலி தெற்கைச் சேர்ந்த பாலசுந்தரம் மங்கையர்கரசி (வயது 60) என்பவராவர்.

வயோதிப பெண்ணுக்கு கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி கீரியொன்று வீட்டுக்குள் புகுந்து கடித்துள்ளது. இதனைத் தொடர்ந்து அவரின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தையடுத்து கடந்த மாதம் 30ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக இவர் அனுமதிக்கப்பட்டார்.

இருந்தும் அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (09) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். இதன்போது இரண்டு முறை கீரி கடித்ததற்கு தடுப்பூசி பெற்றுக் கொண்டதாகவும் மூன்றாவது தடுப்பூசி பெற்றுக் கொள்ளவில்லை என மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊரடங்கு சட்டத்தினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்பு

**வவுனியா விசேட நிருபர்**





நாடு பூராகவும் அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் காரணமாக வவுனியாவிலும் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்தவர்களுக்கு எதிராக அரச ஆதரவாளர்களால் நேற்று (10.05) மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து வன்முறைகள் ஏற்பட்டிருந்தன. இதனையடுத்து உடனடியாக அமுலுக்கும வரும் வகையில் நாடு முழுவதும் இன்று (11.05) புதன்கிழமை காலை 7 மணி வரை பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஊரடங்கு சட்டம் காரணமாக வவுனியாவில் வங்கிகள், அரச நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன பூட்டப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து சேவையும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. அத்துடன், வவுனியா மொத்த மரக்கறி விற்பனையகம் மற்றும் மொத்த வியாபாரிகள் சிலர் தமது வியாபார நிலையங்களை திறந்து வியாபாரம் செய்வதையும், ஊரடங்கு சட்டத்தையும் மீறி குறித்த வியாபார நிலையங்களுக்கு மக்கள் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

# ஆணொருவரின் சடலம் மீட்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை ஆண் ஒருவரின் சடலம் பிரதேச மக்களால் இனங்காணப்பட்டுள்ளது. சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# செம்மலை கடலில் நீராடச் சென்ற மூவர் மாயம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை கடற்கரையில் நீராடச் சென்ற பத்து பேரில் மூவர் மாயமாகியுள்ளனர். அளம்பில் பகுதியைச் சேர்ந்த 3 பேர் செம்மலை கடலில் குளிக்கச் சென்ற வேளையிலேயே கடலில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சகோதரர்கள் மூவரே இவ்வாறு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். மூவரையும் தேடும் பணியில் கடற்தொழிலாளர்கள், உறவினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழகத்துக்கு புதிய நிர்வாக தெரிவு

**மாங்குளம் குருப் நிருபர்**



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கி வருகின்ற இளைஞர் கழகங்களை ஒன்றிணைத்த பிரதேசரீதியான அமைப்பாகிய ஒட்டுசுட்டான் இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக நிர்வாக தெரிவு கூட்டமானது, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒட்டுசுட்டான் இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தின் தலைவி ஜெ.தனுசியா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் இ.ரமேஷ், முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் நா. குகேந்திரா, ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களை சேர்ந்த இளைஞர் யுவதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உறுப்பினர்கள், ஆலோசகர்கள், இளைஞர் சேவை அதிகாரி உள்ளிட்டவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

# வன்முறையில் ஈடுபடாது அமைதியாக செயற்படவும்

**(தலைமன்னார் விஷேட நிருபர்**



நாட்டு மக்களின் உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் மதிக்காது தொடர்ச்சியாக செயற்பட்ட அரசியல்வாதிகளுக்கு வலுசேர்க்கும் விதத்தில் செயற்பட்டவர்கள் இனியாவது மக்களின் உணர்வுகளைப் புரிந்து மதித்து செயற்பட வேண்டும் என முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஹூனைஸ் பாறுக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

இன்று நாடானது அசாதாரண சூழ்நிலைக்கும் பதற்றமான நிலைக்கும் ஆளாகியுள்ளது.

இந்நிலையில் வன்முறையில் ஈடுபடாது பொறுமையாகவும் அமைதியாகவும் நிதானமாகவும் நாட்டின் சட்டத்தை மதித்து மனிதாபிமானத்துடன் செயற்படவேண்டும்.

மிகவும் அமைதியான முறையில் காலிமுகத்திடலில் நாட்டு மக்களின் உரிமைக்காகவும் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் மீது வன்முறை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் போராட்டம்

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**



காலி முகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட வன்முறை சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது அகிம்சை போராட்டத்தினை அராஜகமாக்கிய பயங்கரவாதத்தினை எதிர்ப்போம் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டனர்.

காலி முகத்திடலில் தன்னெழுச்சியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு வன்முறையினை கையாண்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு எதிராகவும் ஊழல்மிக்க தலைவர்களுக்கு எதிராகவும் நடக்கின்ற மக்களின் தன்னெழுச்சி போராட்டத்திற்கும் அதில் கலந்து கொண்ட அப்பாவி பொது மக்களை தாக்குவது வேதனைக்குரிய விடயம் என தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் அரசினால் மேலும் தொடருமானால் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் தீவிரமடையும். இதற்கு காரணமானவர்களை விரைவில் கைதுசெய்து நாட்டிற்கு பொறுப்பு கூறக்கூடிய ஆட்சிமுறைமையினை விரைவில் கொண்டுவரவேண்டும் என தெரிவித்தார்.

# ச.தொ.சவில் பால்மா பதுக்கல்; நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் விற்பனை செய்வதற்காக கொண்டுவரப்பட்ட பால்மா உதவி முகாமையாளரின் அலுவலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு பொறுப்பதிகாரியிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை சதொச விற்பனை நிலைய உதவி முகாமையாளருக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார். எனவே பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேற்று முன்தினம் (09) சாந்தசோலை கிராம மகளிர் அமைப்பினால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் ச.தொ.சவில் பால்மா விற்பனைக்கு வழங்கப்படவில்லை. எனினும் உதவி முகாமையாளரின் அலுவலகத்தில் மறைத்து பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொது மக்களினால் கிடைத்த முறைப்பாடு தொடர்பாக வவுனியா மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு பொறுப்பதிகாரிக்கு இரகசியத் தகவலை வழங்கியிருந்தேன். எனினும் சில நிமிடங்களில் பால்மா உட்பட பதுக்கி வைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் சில உடனடியாக உதவி முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விற்பனை செய்வதற்காக சதொசவிற்கு வெளியே எடுத்துவரப்பட்டுள்ளது . எனவே நுகர்வோர் பாதுகாப்பு பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்ட இரகசியத்தகவல் எவ்வாறு உதவி முகாமையாளருக்கு கிடைத்தது? இவ்விடயத்தில் தொடர்புபட்ட இரு உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. தற்போது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார சுமையினால் பாதிக்கப்பட்ட பெண்தலைமை குடும்பங்கள், சிறுவர்கள் சொல்லெண்ணா துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர். எனவே இவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையினை எடுக்க மாவட்ட அரசாங்க அதிபர் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கிழக்கின் குரல்



# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கோவிட் 04வது தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

## கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொவிட்19 மூன்றாவது தடுப்பூசி பெற்ற 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, 04வது பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட் தொற்று வேகமாக பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதால் உடனடியாக 04வது பைசர் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஏற்கனவே 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது, இரண்டாவது தடுப்பூசியாக சினோபாம் ஏற்றப்பட்டுள்ளது. மூன்று, நான்காவதாக பைசர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சுகாதார வைத்தியதிகாரி அலுவலகங்களில் அல்லது சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ள தடுப்பு மருந்து வழங்கும் இடங்களுக்குச் சென்று தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் உள்ள 13 சுகாதார வைத்தியதிகாரி அலுவலகங்களிலும் இத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்



கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு கொவிட்19 இரண்டாவது பைஸசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சகல பாடசாலைளிலும் 12 தொடக்கம் 15 வயது வரையிலான முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு பைஸசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே 16 தொடக்கம் 19 வயதுக்குட்பட்டவர்கள் முதலாவது, இரண்டாவது தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்பவர்களுக்கு கொவிட்19 பைசர் தடுப்பூசியினை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும், பொதுச் சுகாதார பரிசோதகர்களை தொடர்பு கொண்டு தமக்கான தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

# புதிய உறுப்பினராக சத்திய பிரமாணம்

(சவளக்கடை குறூப் நிருபர்)



சம்மாந்துறை பிரதேச சபையின் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் புதிய உறுப்பினராக அப்துல் ஹமீட் அன்வர் திங்கட்கிழமை (09) சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் முன்னிலையில் தவிசாளர் அலுவலகத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபை உப தவிசாளர் ஏ.அச்சு முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர். சம்மாந்துறை பிரதேச சபை தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பாக தெரிவு செய்யப்பட்டு உறுப்பினராக பதவி வகித்து வந்த வை.வீ.முஹம்மட் முஸம்மில் இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# பிறப்பு, இறப்பு பதிவாளர் இல்லாமையினால் மக்கள் அவதி

(ஆலம்குளம் தினகரன் நிருபர்)

அட்டளைச்சேனை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆலம்குள பிரதேசத்துக்கு இதுவரையும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் இல்லாமையினால் இங்கு உள்ள மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

விவாக மற்றும் இறப்பு, பிறப்பு போன்ற நிகழ்வுகளை முறையாக பதிவு செய்வதற்கு இங்கிருந்து 15 மையில்களுக்கு அப்பால் சென்று அந்தப் பகுதியிலுள்ள பதிவாளரிடம்

பதிவு செய்யும் துர்ப்பாக்கியா நிலைக்கு இப்பிரதேச மக்கள் முகங்கொடுக்க வேண்டி உள்ளனர்.

இதனால் பதிவுகளை முறையாக உரிய நேரத்திற்கு பதிவு செய்ய முடியாமலும் சில வேளை காலம் தாழ்த்தி பதிவுகளை பதிய வேண்டிய நிலையும் ஏற்படுகிறது, இதனால் சமூக மற்றும் சட்ட சிக்கல்களால் பெரும் அசௌகரியங்களுக்கும் இம்மக்கள் முகம் கொடுக்கின்றனர். இது சம்மந்தமாக மாவட்ட அரசாங்க அதிபருக்கும், பிரதேச செயலாளருக்கும் பல முறை முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

இம்மக்களின் கஷ்டங்களை கருத்தில் கொண்டு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவுமாறு பிரதேச மக்கள் வேண்டுகின்றனர்.

# பெரியநீலாவணை கடற்கரையில் மீன்பிடி உபகரணத்துக்கு தீவைப்பு



(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

பெரியநீலாவணை கடற்கரைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட கரைவலைத்தோணி ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக கரைவலை உரிமையாளார் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை 1பீ சேர்ந்த சிவலிங்கம் தனுஜன் என்பவருக்கு உரித்தான கரைவலைத்தோணியே இனந்தெரியாத சந்தேக நபர்களால் தீவைத்து எரித்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் திங்கட்கிழமை (9) இரவு 11.00 மணியளவில் நடைபெற்றுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நிறுத்தி வைக்கப்பட்ட கரைவலைத்தோணியானது தீப்பற்றிக்கொண்டதை கண்டவர்கள் அதனை தோணி உரிமையாளரின் வீட்டுக்கு சென்று தகவலை தெரிவித்தனர். இவ்விடயமாக தோணி உரிமையாளர் தனது உறவினர்களின் உதவியுடன் கடற்கரைக்கு விரைந்து சென்று பார்வையிட்டதுடன், தீப்பற்றிக்கொண்ட கரைவலைத்தோணியை நீர் ஊற்றி தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுள்ளனர்.

இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்ட கரைவலைத் தோணியின் பெறுமதி சுமார் பத்து இலட்சம் ரூபா என உரிமையாளர் தெரிவித்தார்.

# மாணவர்களின் போஷாக்குணவு கொடுப்பனவை அதிகரிக்க கோரிக்கை

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கல்வி அமைச்சினால், தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் 30 ரூபா போஷாக்குணவுக்கான கொடுப்பனவு தொகையை அதிகரித்து வழங்குவதற்கு, அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஒப்பந்தகாரர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

உணவுப் பொருட்களின் தற்போதைய அதிகரித்த விலையேற்றம் காரணமாக, பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்குணவு வழங்குவதில் ஒப்பந்தகாரர்கள் பல்வேறு சிக்கல், சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக சுட்டிக் காட்டுகின்றனர்.

நாளொன்றிற்கு, ஒரு மாணவனுக்கு ரூபா 30 பெறுமதியான உணவு வழங்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உணவு வகையறாக்கள் தொடர்பில் கல்வி அமைச்சு ஏற்கனவே சுற்றுநிருபம் மூலம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

போஷாக்குணவின் தரம், அளவு, வழங்கும் நேரம், பெறுமதி உள்ளிட்ட இதர விடயங்கள் தொடர்பிலும் கல்வி அமைச்சினால் தெளிவாக எழுத்து மூலம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களினால் இப்பணி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்காலத்தில் உணவு மற்றும் அத்தியவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் தினசரி அதிகரித்துச் செல்வதினால், குறித்த போஷாக்குணவுக் கொடுப்பனவு 30 ரூபாவை அதிகரித்து வழங்குவதற்கான அவசர நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு உதவ வேண்டும் என ஒப்பந்தகாரர்கள் கோருகின்றனர்.

# ஹிஸ்புல்லாஹ்வின் வீட்டுக்கு கல் வீச்சு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் காத்தான்குடியிலுள்ள வீட்டின் மீது திங்கட்கிழமை (09) மாலை கல் வீச்சு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி 3ஆம் குறிச்சி ஊர் வீதியிலுள்ள முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வின் வீட்டின் மீது மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த போது இந்த கல் வீச்சு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தினால் வீட்டின் முற்பகுதியிலுள்ள ஜன்னல் கண்ணாடி உடைந்து சேதமடைந்துள்ளது.

சம்பவத்தையடுத்து பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

(றொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை மிகிந்தபுர பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரொருவரை ஞாயிற்றுக்கிழமை (08) கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 10 கிராம் 550 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிண்ணியா அண்ணல் நகர் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞன் என பொலிஸார் குறிப்பிட்டனர். நீண்ட நாட்களாக கிண்ணியா பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து வந்த நிலையில் குறித்து நபரை பின்தொடர்ந்த பொலிசார் சோதனையிட்டபோது அவரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

# நேற்றைய பொலிஸ் ஊடரங்கால் வெறிச்சோடிக் காணப்படும் நகரங்கள்



அக்கரைப்பற்று நகரில் (படம்; அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



மூதூரில் (படம்; மூதூர் தினகரன் நிருபர்)



கல்முனையில் படம்; நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்



மட்டக்களப்பில் (படம்;பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரலவின் கந்தளாயிலுள்ள வீடு மற்றும் கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர்கள் பலரின் வீடுகள் மீது நேற்றுமுன்தினம் (10) ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இராஜாங்க அமைச்சர் கபில நுவன் அத்துகோரலவின் இல்லத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதை படத்தில் காணலாம். படம்;முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்



ஆலம்குளம் சம்புநகர் பிரதேசத்திலிருந்து அட்டாளைச்சேனை பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு, அப்பகுதியினூடாக போக்குவரத்து சேவை இல்லாததால், பாதையால் செல்லும் உழவு இயந்திர பெட்டியில் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லுவதை படத்தில் காணலாம்.

(படம்; ஆலம்குளம் தினகரன் நிருபர் )

## சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மாஅதிபர்...

பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து, சிவில் உடையில் இருந்துள்ளார். தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக, அங்கிருந்து அவர் ஓடி தப்ப முயன்றபோதிலும், தாக்குதல் நடத்திய குழுவினர் பின் தொடர்ந்து அவரை தாக்கியுள்ளனர்.

எனினும், தாக்குதல் சம்பவத்திலிருந்து பொலிஸார் அவரை மீட்டு பாதுகாப்பாக, அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளனர்.

கொழும்பு காலி முகத்திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலை கட்டுப்படுத்த சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தென்னகோன், உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## அலரி மாளிகையிலிருந்து...

கடிதத்தை அவர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பியிருந்தார்.

இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியமையை உறுதி செய்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத்தின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில் அரசியலமைப்பின் 47 2 (ஆ) சரத்துக்கு அமைய பிரதமர்மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் பதவியில் இருந்து விலகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்றுமுன்தினம் மாலை அனுப்பியிருந்தார்.

பொது நலனுக்காக அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் எதிர்காலத்தில் மேலும் பாரிய தியாகங்களை செய்ய தாம் தயாராகவுள்ளதாகவும் அவர் தமது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையின் மூலமும் நாடும் மக்களும் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு தீர்வு காண்பதே தமது ஒரே நோக்கமாகும் எனவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரச பயங்கரவாதம்...

கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது, உலகின் மிக அமைதியான 31நாள் கொழும்பு காலிமுக திடல் போராட்டம், பிரதமரின் அதிகாரபூர்வ இல்லமான அலரி மாளிகையில் இருந்து கிளம்பி வந்த அரச பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டது. இதனால், இனி இலங்கையர்களின் கோஹோம்கோதா, கோஹோம்ராஜபக்ச (GoHomeGota & GoHomeRajapaksasa) என்ற கோஷங்கள், இலங்கையை நோக்கிய சர்வதேச சமூகத்தின் கோஷமாகவும் மாற வேண்டும்.

கொழும்பில் இருக்கின்ற மிகப் பல அல்லது அனைத்து வெளிநாட்டு ராஜதந்திரிகளும், கொழும்பு காலிமுகதிடல் போராட்டத்தை, சமகாலத்தில் உலகில் நடைபெற்ற மிக அமைதியான, ஒழுக்கமான போராட்டம் என தனிப்பட்ட முறையிலும், பகிரங்கமாகவும் கூறி இருந்தார்கள். இந்நிலையில் இப்போராட்டம் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம், இன்று இலங்கையின் வெட்கமற்ற அரச பயங்கரவாதம் மீண்டுமொரு முறை அம்பலமாகி உள்ளது என தெரிவித்துள்ளார்.

## சுமார் 25 பிரமுகர்களது...

‘மைனா கோ கம’, ‘கோட்டா கோ கம’ அறவழிப் போராட்டக்காரர்கள் மீதும், அவர்கள் அமைத்திருந்த கூடாரங்கள் மீதும் ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் மக்களின் போராட்டங்கள் வெடித்தன.

மக்களின் கோபாவேசத்தின் வெளிப்பாடாக வீரகெட்டிய மெதமுலனவில் உள்ள ராஜபக்ச குடும்பத்தின் பூர்வீக இல்லமும் கொளுத்தப்பட்டது. ராஜபக்சக்களின் பெற்றோரின் கல்லறையும் அடித்து நொறுக்கப்பட்டது.

ஜோன்சன் பெர்னாண்டோ, பந்துல குணவர்தன, கெஹலிய ரம்புக்வெல, சனத் நிஷாந்த, திஸ்ஸ குட்டியாராச்சி, விமல் வீரவன்ச, பிரசன்ன ரணதுங்க, ரமேஷ் பத்திரண, சாந்த பண்டார, அருந்திக்க பெர்னாண்டோ, கனக ஹேரத், மஹிபால ஹேரத், காமினி லொக்குகே, நிமல் லான்சா, பிரசன்ன ரணவீர, ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம். சந்திரசேன, சன்ன ஜயசுமன, குருநாகல் மேயர், மொரட்டுவ மேயர் 25 இற்கும் மேற்பட்ட ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர்களின் வீடுகள் சேதமாக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. அவர்களுக்குச் சொந்தமான சில விடுதிகளும் அடித்து நொறுக்கப்பட்டன.

கொழும்பு காலிமுகத்திடலுக்கு அரச வன்முறையாளர்களை அழைத்து வந்த பேருந்துகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொலிஸார் ஆகியோரின் வாகனங்களும் மக்களால் சேதமாக்கப்பட்டு எரியூட்டப்பட்டன.

அநுராதபுரத்தில் உள்ள ராஜபக்சக்களின் மந்திரவாதியான 'ஞான அக்கா' என்றழைக்கப்படும் ஞானவதியின் வீடு மற்றும் அவருக்குச் சொந்தமான விடுதியும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

## மத்திய வங்கி ஆளுநர்,... (03 ஆம் பக்கத் தொடர்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த நெருக்கடியை சமாளிக்க தனது கட்சி எப்போதும் ஆதரவை வழங்கும். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளருடன் ஒரு பயனுள்ள சந்திப்பை நடத்துவது நல்லது. எந்தவொரு நெருக்கடியையும் தூண்டுபவர்களுடன் வேலை செய்வதில் ஈடுபடாத வரை, எந்தவொரு பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் தனது ட்விட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஹர்ஷா டி சில்வா, எரான் விக்கிரமரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதல் குற்றவாளி... (03 ஆம் பக்கத் தொடர்)

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீதும் எதிர்க்கட்சித் தலைவர் மீதும் தாக்குதல் நடத்திய போது ஏன் சட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்று பொலிஸ் மா அதிபரிடம் கேள்வி எழுப்பப்படும் என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச அரசுக்கு எதிராக நாட்டு மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்துவார்கள் என்று கூறிய அவர், ராஜபக்சக்களை மீட்பதற்காகப் பயன்படுத்தப்படும் அவசர காலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டத்திற்கு மக்கள் செவி சாய்க்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

## மோதல்களுக்குப்... (03 ஆம் பக்கத் தொடர்)

நேற்றைய தினம் அங்கு விசேட ஊடக சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.அந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட சட்டத்தரணிகள்:

அமைதியாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பூமியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சட்டத்தை நடைமுறைப்படுத்த தவறிய பொலிஸ் உயரதிகாரிகள் உள்ளிட்ட பாதுகாப்பு படையினர் தொடர்பிலும் சட்டம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, வன்முறைக்குப் பதிலாக அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மூலம் மட்டுமே வெற்றி பெற முடியும் என்றும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சங்கம் அனைத்து மக்களையும் கேட்டுக் கொண்டுள்ளது. (ஸ)

## ஞானக்காவின்... (03 ஆம் பக்கத் தொடர்)

சுவர் உடைக்கப்பட்டதால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உள்நுழைந்தனர்.

பின் னர் போராட்டக்காரர்கள் ஞானக்காவின் உடைமைகளில் சிலவற்றை கிராம மக்களுக்கு விநியோகித்ததுடன் வீட்டிற்கு தீ வைத்து எரித்தனர். அதன்பின்னர் ஞானக்காவின் கோவில் தாக்கப்பட்டது. மேலும் நவநுவர வீதியிலுள்ள ஞானக்காவின் ஹோட்டலை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள், அங்கிருந்த அனைத்து சொத்துக்களையும் அழித்ததுடன் தீயிட்டு எரித்தனர்.

வீட்டிற்கு தீ வைக்கப்பட்டதையடுத்து, ஞானக்காவின் வீட்டை விட்டு பாதுகாப்பு படையினர் வெளியேறியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில்...

தடுப்பதற்கு பொறுப்பான தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அந்தப் பொறுப்புகளை புறக்கணிக்கக் கூடாது எனவும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகைக்கு சென்ற குழுவொன்றின் வன்முறை நடவடிக்கை தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மாஅதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று (10) பிற்பகல் தெரிவித்தது.

## வன்முறை பழிவாங்கல்களை...

மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தினம் அவரது டுவிட்டர் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் இடம்பெற்றுள்ள சம்பவங்களையடுத்து கொழும்பிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குழப்பகரமான சூழ்நிலை தொடர்ந்தும் நிலவுகின்றன. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரசியல் முக்கியஸ்தர்கள் பலரது வீடுகளும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழ்நிலையிலேயே வன்முறைகள் பழிவாங்கல்களை நிறுத்தி மக்களை அமைதி காக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது ட்விட்டர் பதிவின் மூலம் தெரிவித்துள்ளார்.(ஸ)

## வன்முறைகள் இராணுவ...

ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அமைதியின்மை ஏற்பட்டது. இந்நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ட்விட்டர் செய்தியொன்றை பதிவிட்டுள்ளார்.

"நீதி மற்றும் ஜனநாயக ஆட்சிக்காக மிகவும் அமைதியான முறையில் போராட்டத்தை நடத்திய நமது குடிமக்கள் அனைவரிடமும், இராணுவ ஆட்சிக்கு வழி வகுக்கும் வகையில் வன்முறைகளில் ஈடுபட வேண்டாம் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என அவர் ட்வீட் செய்துள்ளார்.

இந்த ஆபத்தை தடுத்து நிறுத்துவதற்கு, பொதுமக்கள் ஒன்றிணைந்த செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க கேட்டுக் கொண்டார்.

## பாராளுமன்றை விரைவில்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு ஜனாதிபதி அல்லது பிரதமருக்கு மாத்திரமே அதிகாரம் உள்ளதாகவும், அதனை கருத்திற்கொண்டே சபாநாயகர் அந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதன்படி, புதிய பிரதமர், அமைச்சரவை மற்றும் அவைத்தலைவர் நியமனத்துக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, சபாநாயகர் தலைமையில் இன்று (11) கட்சித் தலைவர்களின் விசேட கூட்டமொன்று கூட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து கலந்துரையாடுவதற்காக கட்சித் தலைவர்களின் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

## குமார வெல்கம MP...

காயம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குமார வெல்கம தாக்குதலுக்கு உள்ளானதன் பின்னர் சுகவீனமுற்றதன் காரணமாக தீவிர சிகிச்சை பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார்.

## அமைதியாக இருக்குமாறு...

தெரிவித்துள்ள ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தீர்மானமிக்க இத்தருணத்தில் மக்கள் அமைதிகாக்க வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

## நேர்மையாக ஈட்டிய...

பொதுஜன பெரமுன சார்பில் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இராஜாங்க அமைச்சராக செயற்பட்டுவந்த அவர், கடந்த வாரம் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மட்டுமல்ல முழு...

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

மோதல்கள் தொடருமானால் அது பொருளாதாரத்துக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும், அனைவரும் அமைதியாக இருக்குமாறும் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள விசேட அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## IGP, இராணுவத் தளபதிக்கு...

அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது ஆளுந்தரப்பு ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து எழுந்த அசாதாரண நிலைமைகளின்போது பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நடந்து கொண்ட விதம் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே, பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி ஆகியோரை இலங்கை உரிமைகள் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## தனது கடமையிலிருந்து...

சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட எதிர்கட்சி தலைவரையும் பாதுகாக்க முடியாத பொலிஸ் அதிகாரிகள் வேறு யாரை பாதுகாக்க போகிறார்கள் என கேள்வி எழுப்பியுள்ளார்.

காலிமுகத்திடலில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியுள்ளது. சம்பவத்திற்கு பொலிஸ் மா அதிபர் முழுப்பொறுப்பு கூற வேண்டும்.

நாட்டின் சட்ட ஒழுங்கையும், மக்களையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் மக்களை பாதுகாக்க தவறியுள்ளனர். எனவே இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் மீது பாரபட்சம் இன்றி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் நிலைமை உலக வங்கி...

மீட்சியின் பாதையில் இவை தாக்கம் செலுத்துவதாகவும் அவர் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை கவலையளிப்பதாகவும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் ஃபரிஸ் எச். ஹடட் குறிப்பிட்டுள்ளார்.

## இறுதி நேர வன்முறைக்கு...

ராஜபக்ஷவினர் நேர்மையான விதத்தில் தமது பதவியை விட்டு விலகுவதற்கு தயாரில்லை. இந்த பதவி மூலமாக கோடான கோடியை சம்பாதித்து இருக்கின்றார்கள். அணையப் போகும் விளக்கு கடைசி நேரத்தில் வெளிச்சத்தை கொடுப்பது போல இறுதி நேரத்தில் வன்முறை உருவாக்கியிருக்கின்றார்கள்.

யார் மேல் குற்றத்தை சுமத்தப் போகின்றார்கள் என்பது தான் முக்கியம். கடந்த 70 வருடங்களாக தமிழர்களுக்கு நடைபெற்றது சிங்களவர்களுக்கு நடைபெறுகிறது. அதை நாம் முக்கியமாக நினைவில் வைத்திருக்க வேண்டும்.

பிரதமர் பதவி விலகிய பின்னர் தேசிய அரசாங்கம் தொடர்பாக கேள்வியெழுப்பியபோது, தேசிய அரசாங்கமொன்று கோட்டாபய ராஜபக்ஷவினுடைய தலைமையில் நடைபெறுமா என்பது கேள்விக் குறி. ஏனென்றால் அவருடைய ஆட்சியைத்தான் வேண்டாம் என மக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார். அவ்வாறான ஒருவரை தலைவராக வைத்துக்கொண்டு தேசிய அரசாங்கத்தை நிறுவ முடியுமா என்ற கேள்வி இருக்கிறது.

அவ்வாறு உருவானாலும் நாம் எந்தவிதமான பதவிகளை ஏற்பதாக இல்லை. எங்களை பொறுத்தவரை சில முக்கியமான விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். தொல்லியல் திணைக்களம் சம்பந்தமான ஆணைக்குழு வாபஸ் பெறப்பட வேண்டும். வட,கிழக்கு மாகாணங்களில் இருக்கும் இராணுவத்தினரை நன்றாகக் குறைக்க வழிவகை செய்தல் போன்ற கோரிக்கைகளை ராஜபக்ஷ அல்லாத அரசியல் தலைவர் எழுத்து மூலமாக உத்தரவாதம் தருவராக இருந்தால் நாங்களும் பங்கு பெற முடியுமா என்பது பற்றி அந்த நேரத்தில் யோசித்து முடிவெடுக்க முடியும் என்றார்.

## காலிமுகத்திடலில் மீளுருவாகிய...

கடந்த நிலையில், பல எதிர்ப்புகளையும் மீறி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினத்துடன் ஒரு மாதத்தை பூர்த்தி செய்திருந்தது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் மஹிந்த ராஜபக்ஷவை பாதுகாப்போம் என்ற தோரணையில் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் பலர் ஒன்று கூடி கூட்டமொன்றை ஏற்பாடு செய்ததுடன், ஆர்ப்பாட்டமொன்றையும் மேற்கொண்டனர்.

இதன் பின்னர் அலரிமாளிகைக்கு முன்னால் இடம்பெற்ற மைனா கோ கம போராட்டக்களத்திற்குச் சென்ற முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். இதன் காரணமாக கூடாரங்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன.

இதையடுத்து அங்கிருந்து காலிமுகத்திடல் பகுதியில் இடம்பெற்ற கோட்டா கோ கமவிற்குச் சென்ற மஹிந்தவின் ஆதரவாளர்கள் அங்கு போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதுடன், அங்கிருந்த கூடாரங்களையும் எரித்தனர்.

இதன்காரணமாக கோட்டா கோ கம போராட்டக் களம் கலவரபூமியாக மாறியது. தாக்குதல்கள் எல்லை மீறிய பின்னர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கோட்டா கோ கம பகுதியில் நீர்த்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகை பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனையடுத்து அமைதி போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்தவர்களும் தம்மீதான தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் எதிர்த்தாக்குதல் நடத்தியிருந்தனர்.

அத்தோடு, குறிப்பிட்ட சிறிது நேரத்திலேயே கொழும்பு காலிமுகத்திடல் மக்கள் கூட்டத்தால் நிரம்பியது. இதனையடுத்து, ஆளுங்கட்சி ஆதரவாளர்களுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றிருந்தது. இந்தத் தாக்குதலில் காயமடைந்த 229 பேர் வரை வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் அழித்தொழிக்கப்பட்ட கூடாரங்கள் நேற்றையதினமே சிறிது சிறிதாக மீள உருவாக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கோட்டாகம மீளுருவாக்கப்பட்டு ஒரு மாதத்தைக் கடந்த நிலையில், மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## நாட்டில் குழப்பகரமான...

உடைத்துக்கொண்டு உட்பிரவேசிக்க முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தும் வகையில் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக முப்படையினரும் அங்கு அழைக்கப்பட்டு வான் நோக்கிய துப்பாக்கி வேட்டுக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக நேற்று அதிகாலை 2 மணியளவில் மேலதிக இராணுவ செயலணிகளும் அங்கு அழைக்கப்பட்டன.

அதேவேளை நேற்று அதிகாலை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அலரி மாளிகையில் இருந்து வெளியேறியதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய தினம் மிரிஹானையிலுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இல்லத்திற்கு முன்பாக பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மல்வானை பகுதியிலுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இல்லத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பிலும் பல்வேறு பிரதேசங்களிலும் அமைச்சர்கள் உள்ளிட்ட சிலரின் வீடுகள் மீது நேற்றும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன;

அமைதியான முறையில் செயற்படுமாறு நாட்டு மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார். அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு நாட்டின் அமைதிச்சூழல் மிகவும் முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரிய அழிவுகள் இப்போதைக்கு இடம்பெற்று முடிந்துள்ளதாக தெரிவித்துள்ள அவர் பொருளாதார ரீதியில் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ள இத்தகைய தருணத்தில் குழப்பங்களும் வன்முறைகளும் எந்தவித பயனையும் தராது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை,பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிசார் மற்றும் இராணுவத்தினருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி நாட்டில் அமைதிச் சூழலையை நிலைநாட்டுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைதி சூழ்நிலையை நிலைநாட்டுவதிலும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பிலும் மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் பொலிசாரும் முப்படையினரும் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்ட மாஅதிபர் சஞ்சய் ராஜரத்னம் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அவர் கடிதம் மூலம் பொலிஸ் மா அதிபருக்கு அந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

கொழும்பிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களில் 8பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 209 பேர் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவர்களில் இரண்டு அரசியல்வாதிகளும் இரண்டு பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் உள்ளடங்குகின்றனர் .

அத்துடன் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவோரில் ஐந்து பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்துள்ள அரசியல்வாதிகளில் நிட்டம்புவையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்துள்ள பொது ஜன பெரமுனவின் பொலநறுவை மாவட்ட எம்பி பிரேமகீர்த்தி அத்துகோரள மற்றும் இமதுவ பிரதேசசபையின் தலைவரும் உள்ளடங்குகின்றனர். இமதுவ பிரதேச சபைத் தலைவரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் குழப்பகரமான சூழ்நிலையின் போது இடம்பெற்ற மோதல்களில் இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் நிலவிய குழப்பகரமான சூழ்நிலையின் போது முன்னாள் பிரதமரின் மெதமுலன இல்லத்தின் மீதும் டி.ஏ.ராஜபக்ச நினைவுத் தூபி மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன் வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.அமைச்சர்கள் பலரது வீடுகள் தாக்கப்பட்டு மேலும் சில அமைச்சர்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல அரசியல்வாதிகளின் வீடுகளும் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ச, பந்துல குணவர்தன, ரமேஷ் பதிரண, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க ,கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் சிலரது வீடுகளும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த உள்ளிட்ட இராஜாங்க அமைச்சர்கள் எம்பிக்கள் சிலரது வீடுகளும் தாக்கப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டுமுள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறை மற்றும் தாக்குதல் சம்பவங்களின் போது பஸ்கள், அமைச்சர்களின் சொகுசு வாகனங்கள் உள்ளிட்ட பெருமளவு வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டுமுள்ளன. கொழும்பில் பல்வேறு வீதிகளிலும் அவ்வாறு தாக்கப்பட்ட மற்றும் எரிக்கப்பட்ட வாகனங்களை காண முடிந்தது. கொழும்பு கங்காராம வாவி பகுதியில் பெருமளவு வாகனங்கள் எரிக்கப்பட்ட நிலையிலும் வாவிக்குள் தள்ளப்பட்டிருந்த நிலையிலும் காண முடிந்தது

கொழும்பில் நேற்று பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பொலிசாரும் இராணுவத்தினரும் இணைந்து பாதுகாப்பு கடமைகளை மேற்கொண்டதுடன் வாகனங்களை சோதனையிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதையும் காண முடிந்தது.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் வாகன போக்குவரத்துக்கள் மிகவும் குறைவாக காணப்பட்டதுடன் பொலிஸ் மற்றும் இராணுவ வாகனங்கள் கடமைகளில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது.

தொடர்ந்தும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ஸ)

# பண்டாரவளையில் அரசியல்வாதிகளின் வீடுகள் மீது தாக்குதல்





ஹாலிஎல விசேட நிருபர்

கொழும்பில் அமைதியான போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலால் ஆத்திரமடைந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பண்டாரவளை, ஹாலிஎல மற்றும் பதுளை ஆகிய இடங்களில் அரச வைத்தியசாலை அலுவலகங்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் உட்பட பெருமளவிலான மக்கள் போராட்டக்காரர்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி மற்றும் பண்டாரவளை மேயர் ஜானக நிஷாந்த ரத்நாயக்க ஆகியோரின் பண்டாரவளையிலுள்ள வீடுகளும் தாக்கப்பட்டுள்ளன.

# கிளி/சோறன்பற்று கணேசா வித்தியாலயம் விளையாட்டு மைதானம் தனியாருக்கு விற்பனை

கரவெட்டி தினகரன் நிருபர்

கிளி/சோறன்பற்று கணேசா வித்தியாலயத்தின் பாவனையில் 100 வருடங்களாக இருந்த விளையாட்டு மைதானத்தை தனியார் ஒருவருக்கு விற்பனை செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் புதுக்காட்டுச் சந்தி தாழையடி வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கணேசா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள தனியார் காணியினை பாடசாலை நிர்வாகம் சுமார் 100 வருடங்களாக விளையாட்டு மைதானமாக பாவித்து வருவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். அக்காணியினை பெற்றுக் கொள்வதற்கு பாடசாலை நிர்வாகம் தயாராகவிருந்தது. அதற்கு காணி உரிமையாளரும் ஒப்புக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் அக்காணி தனிநபர் ஒருவருக்கு விற்கப்பட்டதாக தெரிவித்து புதுக்காட்டு சந்தி தாளையடி பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.


# பெறுகை அறிவித்தல்

## காசல் வீதி மகளிர் மருத்துவமனை - கொழும்பு - 08

காசல் வீதி மகளிர் மருத்துவமனை வளாகத்தில் உள்ள சகல கட்டிடங்களினதும் மின்சார அமைப்பு பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் - 2022 ஆண்டிற்காக கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இவ் வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தொகை ரூ.1500.00 செலுத்திய பின்பு தலைமையகத்தில் 2022.05.12 முதல் 2022.06.01 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை வார நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறித்தவாறு பூர்த்திசெய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் கீழ்க்காணுமாறு வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2022.06.02 மு.ப.10.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்த உடனேயே வருகை தருவதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

முகவரி : **பணிப்பாளர், காசல் வீதி மகளிர் மருத்துவமனை, கொழும்பு - 08**

| வேலை விடயம் | தகைமைகள் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| காசல் வீதி மகளிர் மருத்துவமனை வளாகத்தில் உள்ள சகல கட்டிடங்களினதும் மின்சார அமைப்பின் பாராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் - 2022 | இக்டாட் பதிவுத்தரம் EM 05, Electrical Instalation -Low Voltage (EI-Lv) | ரூ.30,000.00 | 120 நாட்கள் |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**காசல் வீதி மகளிர் மருத்துவமனை, கொழும்பு - 08**


# புதையல் தோண்டிய இராணுவ அதிகாரி உட்பட 10 பேர் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

எம்பிலிப்பிட்டிய உடவளவ பிரதேசத்தில் புதையல் தோண்டிய இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 10 சந்தேக நபர்களை உடவளவ பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

உடவளவ மலபொட்டுஆர பிரதேசத்தில் நீரோடையொன்றின் அருகில் இவர்கள் புதையல் தோண்டிய போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடவளவ பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதையல் அகழும் பணியில் ஈடுபட்டிருந்தவர்களை வழிநடத்திய இராணுவ அதிகாரி நாரஹேன்பிட்டிய இராணுவ வீடமைப்பு திட்டத்தில் வசிக்கும் இராணுவ வைத்தியசாலையில் பணியாற்றுபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் உட்பட புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், தடயப்பொருட்கள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களையும் ஆஜர் செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பெண் ஒருவரின் சடலம் மீட்பு

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரியகாந்தி தோட்டத்தில் இலக்கம் 25 லயன் குடியிருப்பில் வீடொன்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நான்கு பிள்ளைகளின் தாயான எம்.சிவமணியம்மா வயது (71) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் சுகவீனமுற்ற நிலையில் இளைய மகளின் அரவணைப்பில் இருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மே (08) காலை தாயை உடல் நலகுறைவினால் இராகலை பிரதேச வைத்தியசாலைக்கு சென்று மருந்து எடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் (08) பிற்பகல் மருந்து பெற்றுக்கொண்டு வீடு திரும்பிய தாய் தனது வீட்டுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள தனி அறையில் இரவு உணவு சாப்பிட்டுவிட்டு வழமைப் போல தனியாக நித்திரைக்கு சென்றுள்ளார்.

பின்னர் (09) காலை ஏழு மணிவரை நித்திரையில் இருந்து எழும்பாமையால் இளைய மகள், அயலவர்களை அழைத்து கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளார். இதன்போதே அவர் சடலமாக அறையில் கிடந்துள்ளார்.

இதனையடுத்து இராகலை பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் நுவரெலியா தடயவியல் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் வலப்பனை நீதவானின் மரண விசாரணையின் பின்னர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# திடீர் ஊரடங்கு அறிவிப்பால் சிவனொளிபாதமலை யாத்திரிகர்கள் நிர்க்கதி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

ஊரடங்குச் சட்ட அறிவிப்பால் சிவனொளிபாத மலை யாத்திரை சென்றிருந்த பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் நிர்க்கதி நிலையை அடைந்துள்ளனர்.

பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் மேற்கொண்டிருந்த இவர்கள் ஊரடங்குச் சட்டத்தோடு அவை போக்குவரத்துச் சேவையை நிறுத்தியமையால் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர். போக்குவரத்து வசதிகளை இழந்த தமக்கு உணவு தங்குமிடம் போன்ற வசதிகள் கூட இல்லாத நிலையில் தாம் கால் நடையாக நீண்ட தூரம் நடந்து சென்று தமது இருப்பிடங்களை அடைய வேண்டியுள்ளதாக இவர்கள் தெரிவித்தனர்.

இரத்தினபுரி குருவிட்ட வழியாகவும் பலாங்கொடை வழியாகவும் சிவனொளிபாத மலை யாத்திரை சென்றவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை இவர்கள் தமக்கு போக்குவரத்து வசதி கோரி பிரதேச போக்குவரத்து டிப்போக்களிடம் உதவி கோரியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை ஹற்றன் நல்லதண்ணி வழியாக இந்த யாத்திரையை மேற்கொண்ட பயணிகளும் இவ்வாறாகவே பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


SRI LANKA RETAILERS ASSOCIATION

வர்த்தக பங்காளிகளிடமிருந்து செலவுப் பகிர்வுக்கு வேண்டுகோள் விடுக்கும் இலங்கை சில்லறை விற்பனையாளர்கள் சங்கம் (SLRA)

- குத்தகை மற்றும் வாடகைக் குறைப்பு
- செலவுப் பகிர்வை நோக்கிய ஆதரவு

[illegible]



**விஷேட அட்டோணி தத்துவப் பத்திரம் மீளப்பெறல் தொடர்பான அறிவித்தல்**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் மாத்தளை, மெலதும்பொத்த வீதி, இல. 3இல் வசிக்கும் அஸ்வர்டீன் சித்தி இஷாடா (தே.அ.எண். 685542153 வி) ஆகிய நான், இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அனைத்து பிரஜைகளுக்கும் இத்தால் அறிவிப்பது யாதெனில், பிரசித்த நொத்தாரிஸ் ராஜசேகரன் மணிவன்னன் என்பவரால் இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு ஜனவரி மாதம் 08ம் திகதி முடிக்கப்பட்ட இலக்கம் 7814 - 08.01.2016 விஷேட அட்டோணி தத்துவப் பத்திரம் மூலம் என்னால், மாத்தளை, மெலதும்பொத்த வீதி, இல. 3 இல் வசிக்கும் மொஹைடீன் சித்தி உசைரா (கடவுச்சீட்டு இல. எண் 3895391) என்பவருக்கு வழங்கிய மேற்படி விஷேட அட்டோனி தத்துவப் பத்திரத்தை இரண்டாயிரத்து இருபத்தி இரண்டாம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி தொடக்கம் செல்லுபடியற்றதென்றும் அந்நாள் மேற்கூறிய தத்துவப்பத்திரத்தை மீளப்பெறுவதாகவும் அறிவிக்கின்றேன். மேலும் இரண்டாயிரத்து இருபத்தி இரண்டாம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி முதல் மேற்படி தத்துவப்பத்திரம் மூலமாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பு கூற மாட்டேன் என்றும் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அஸ்வர்டீன் சித்தி இஷாடா.**
**இல. 3, மெலதும்பொத்த வீதி,**
**மாத்தளை.**



எரிசக்தி அமைச்சு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**நீடிப்பு அறிவித்தல்**

**B/26/2022 -** **CPC** வளவுகளிலுள்ள **Split** வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல் (தலைமை அலுவலகம், பிளவர் வீதி, தேர்ஸ்டன் வீதி மற்றும் கொலன்னாவ விவசாய இரசாயன பிரிவு)

**B/27/2022 -** அநுராதபுரம் மற்றும் சீனக்குடா விடுமுறை விடுதிகள், அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பில் அமைந்துள்ள **CPC** பிராந்திய அலுவலக வளவுகளிலுள்ள **Split** வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல்

**B/28/2022 -** மாத்தறை விடுமுறை விடுதி மற்றும் காலியில் அமைந்துள்ள **CPC** பிராந்திய அலுவலக வளவுகளிலுள்ள **Split** வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல்

**B/29/2022 -** குருநாகல், பதுளை, பேராதனை மற்றும் கேகாலையில் அமைந்துள்ள **CPC** பிராந்திய அலுவலக வளவுகளிலுள்ள **Split** வகையான வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல்

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

இந்த விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதி முடிவுறுத்தல் நேரமான 2022-05-09ஆம் திகதி பி.ப. 2.00 மணியானது இப்போது 2022-05-17ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 63 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் (2022-07-19ஆம் திகதி வரை) மற்றும் விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். (2022-08-16ஆம் திகதி வரை)

முன்னைய விளம்பரத்தில் உள்ள ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09,**
**தொலைபேசி: 011-5455331**
**தொலைநகல்: 011-5455424**



ලක්ලුණු லக்லுனு LAKLUNU

## லக்லுனு விநியோகிக்கும் முகவர்களை மீண்டும் பதிவு செய்தல் மற்றும் நாடு முழுவதற்குமான லக்லுனு விநியோகிக்கும் முகவர்களின் குழுமத்தை அமைப்பதற்காக விண்ணப்பம் கோரல்

இலங்கையின் உப்பு உற்பத்தியில் முன்னோடியான லங்கா சோல்ட் நிறுவனம் (Ltd) மிகவும் உயர்வான மற்றும் முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுகாதாரப் பாதுகாப்புடன் SLS, ISO 9001, 22000 எனும் சர்வதேச நிலை தரத்தின் பிரகாரம் ''லக்லுனு'' எனும் வர்த்தக நாமத்தின் கீழ் இலங்கையின் உப்புத் தேவைப்பாட்டில் 60% வீதத்திற்கும் மேல் உற்பத்தி செய்து விநியோகிக்கின்றது.

**நீங்கள்.....**

தற்போது லக்லுனு விநியோகிக்கும் முதலீட்டாளராக செயற்படுபவரானால் அல்லது வேறு நுகர்வுக்கான உணவுப் பொருட்களை விநியோகிக்கும் முகவராக செயற்படுபவரானால் அல்லது லக்லுனு விநியோகிக்கும் முகவராக புதிய வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு விரும்பினால் இதன்பொருட்டு விண்ணப்பிக்கலாம்.

### தேவையான தகைமைகள்

- ✓ விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் விற்பனை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.
- ✓ மீள் விநியோக நடவடிக்கைகளுக்காக வாகனமொன்று இருத்தல்
- ✓ விண்ணப்பிக்கும் அதிகாரப் பிரதேசத்தினுள் போதுமான களஞ்சிய வசதிகள் இருத்தல்
- ✓ மீள் விநியோக நடவடிக்கைக்காக ஊழியரொருவரை பணிக்கமர்த்தும் இயலுமை
- ✓ நிதி வசதிகள் இருத்தல் (2,000,000.00 வங்கிப் பிணை முறியொன்றை நிறுவனத்திற்கு வழங்குதல் வேண்டும்)
- ✓ வேறு உற்பத்திகளை விநியோகிக்கும் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகும்.

### நிபந்தனைகள்

- ➢ தற்போது நியமிக்கப்பட்டுள்ள முகவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் வெற்றிடம் நிலவும் விற்பனை அதிகாரப் பிரதேசத்திற்கும் மற்றும் தற்போது நியமிக்கப்பட்டுள்ள ஆனால் உரிய விற்பனை இலக்கை எட்டாத விற்பனை முகவர்களின் விற்பனை அதிகாரப் பிரதேசத்திற்கு மட்டும் குழுமத்திலுள்ள அதிகூடிய தகைமையைக் கொண்டுள்ள புதிய விண்ணப்பதாரர்கள் முன்னுரிமை அடிப்படையின் கீழ் (Priority list) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
- ➢ புதிய விண்ணப்பதாரர்கள் வேறு போட்டிரீதியிலான உப்பு உற்பத்தியை விற்பனை செய்பவர்கள் அல்லது உப்பு உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் / நபர்களுக்கு விற்பனை முகவர் பதவியை வழங்கக்கூடாது.
- ➢ ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெவ்வேறான விற்பனை அதிகாரப் பிரதேசம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதுடன் அந்த அதிகாரப் பிரதேசத்தில் மாதாந்த உப்பு கேள்வியை அடிப்படையாகக் கொண்டு முறையான விண்ணப்பப்படிவம் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அந்த விண்ணப்பப் படிவத்தை (மீளளிக்கப்படாத) 5000.00 ரூபாவை நிறுவனத்திற்குச் செலுத்தி 2022 மே மாதம் 12ஆம் திகதி முதல் 2022 மே மாதம் 25ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் ஹம்பாந்தோட்டை பிரதான அலுவலகத்திலிருந்து அல்லது இல. 44/5, நாராஹென்பிட்டி, நாவல எனும் முகவரியில் அமைந்துள்ள கொழும்பு அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- ➢ ஒவ்வொரு விற்பனை அதிகாரப் பிரதேசத்திற்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அதிகூடிய விற்பனை இலக்கை அடையக்கூடிய விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் ஒருவருக்கு அதிகபட்சமாக 02 முகவர் பதவிகள் மட்டுமே வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அது உயர்நிலை முகாமைத்துவத்தின் சிபாரிசின் அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்கப்படும். இது தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்ளும் முழுமையான உரிமையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.
- ➢ 03 மாத தகுதிகாண் காலத்தின் கீழ் இந்த விற்பனை முகவர் பதவிகள் வழங்கப்படும் என்பதுடன் குறித்த விற்பனை இலக்கை அடைவது தொடர்பில் 03 மாதங்களின் பின் பகுப்பாய்வு செய்யப்பட்டு எதிர்காலத்திற்காக உடன்படிக்கை செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதன் பிரகாரம், 2022 மே 31ஆம் திகதிக்கு முன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பின்வரும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''லக்லுனு விநியோக முகவர் குழுமத்திற்கு விண்ணப்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**லங்கா சோல்ற் லிமிடெட், மஹலேவாய, ஹம்பாந்தோட்ட.**

### மேலதிக விபரங்களுக்கு



**தொலைபேசி : 047-2220847 (பிரதான அலுவலகம்)**
**011-2369053 (கொழும்பு அலுவலகம்)**
**தொலைநகல் : 047-2220340**
**மின்னஞ்சல் : lankasaltsales@gmail.com**
**இணையதளம்: www.lankasalt.lk**

Lanka Salt Ltd.

# கந்தகெட்டிய பிரதேச சபை

**2023 ஆம் ஆண்டிற்காக கந்தகெட்டிய பிரதேச சபையினால் சமர்ப்பிக்கப்படுகின்ற வரவுசெலவுதிட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்**

கந்தகெட்டிய பிரதேச சபையினால் 2023 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற வரவுசெலவுதிட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு 2023 ஆம் ஆண்டில் மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படும் ஆலோசனைகளை 2022.06.30ம் திகதிக்கு முன்னர் எனக்கு சமர்ப்பிக்குமாறு சகல பிரஜைகளுக்கும் இத்தால் அழைப்பு விடுக்கின்றேன்.

**(ஆர்.எம்.கமல் ராஜபக்ஷ)**
**தலைவர்**
**கந்தகெட்டிய பிரதேச சபை**

**2022.05.05**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்கான சட்டத் தொகுப்பின் 6(1) அத்தியாயத்தின் பிரகாரம் அதிகாரப் பிரதேச பிரஜைகளுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

2023ஆம் வருடத்திற்கான குளியாப்பிட்டிய பிரதேச சபையினால் தயாரிப்பதற்கு உத்தேசித்துள்ள வரவு செலவுத் திட்டம் ஆவணத்தின் மூலதன செலவு மற்றும் மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏதேனும் கருத்து முன்மொழிவுகள் இருந்தால் 2022-06-30ஆம் திகதிக்கு முன் எனக்குச் சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறிவிக்கின்றேன்.

**2022-05-11ஆம் திகதி**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில்.**

**ஈ.எம். விஜயசிறி ஏக்கநாயக்க,**
**தலைவர்,**
**பிரதேச சபை, குளியாப்பிட்டிய.**
**தொலைபேசி: 0374947212**
**மின்னஞ்சல்: kuliyaps@yahoo.com**

---

# பொதுமக்கள் கருத்துக்களுக்கான இலங்கை கட்டளைகள் வரைவு

1. பிளாஸ்டிக் குழாய் முறைமைக்கான **(Plastic Piping System)** - நீர் வழங்கலுக்கான பொலியத்தீன் **(PE)** குழாய்கள் மற்றும் பொருத்தல்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு - பொது
   **SLS 1497: Part 1: 2022** (முதலாம் திருத்தம்)
   **(SLS ISO 4427: Part 1: 2019)**
2. பிளாஸ்டிக் குழாய் முறைமைக்கான **(Plastic Piping System)** - நீர் வழங்கலுக்கான பொலியத்தீன் **(PE)** குழாய்கள் மற்றும் பொருத்தல்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு
   **SLS 1498: Part 2: 2022** (முதலாம் திருத்தம்)
   **(SLS ISO 4427: Part 2: 2019)**
3. பிளாஸ்டிக் குழாய் முறைமைக்கான **(Plastic Piping System)** - நீர் வழங்கலுக்கான பொலியத்தீன் **(PE)** குழாய்கள் மற்றும் பொருத்தல்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு
   **SLS 1499: Part 3: 2022** (முதலாம் திருத்தம்)
   **(SLS ISO 4427: Part 3: 2019)**

மேற்குறிப்பிடப்பட்ட கட்டளைகள் வரைவுகளுக்கான பொதுமக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய குழுக்களிடமிருந்து கருத்துக்களை இலங்கை கட்டளைகள் நிறுவனம் அழைக்கின்றது.

இந்த கட்டளை வரைவுகள் இறுதியாக்கப்படுவதற்கு முன் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் இயைபுடைய குழுவினால் கிடைக்கப்பெற்றுள்ள கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் நூலகத்தில் மேற்படி கட்டளைகள் வரைவின் பிரதிகளைப் பார்வையிடலாம் அல்லது பெற்றுக்கொள்ளலாம்.

சகல கருத்துக்களையும் 2022-07-11ஆம் திகதி அல்லது அதற்கு முன் பணிப்பாளர் நாயகத்திற்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**தொ.பே. 011-2671567-72**
**மின்னஞ்சல்: dg@slsi.lk**
**இணையதளம்: www.slsi.lk**

**இலங்கை கட்டளைகள் வரைவு நிறுவனம்**
**தொழில்நுட்ப அமைச்சு**

---

## afc தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பீ.எல்.சி உடன் கிளையுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 28.02.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 26.05.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழ குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

[illegible]

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

722, கோட்டை வீதிஇராஜகிரிய
26.05.2022

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும் இடைநிறுத்துவதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பீ.எல்.சி கொண்டுள்ளது.

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பீ.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை: 0115 573600

---

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## கேள்வி திறத்தல் ஒத்தி வைத்தலுக்கான அறிவித்தல்

2022.03.31ஆம் திகதி பிரசுரமான, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பொறியியல் பீடத்திற்கு கல்விசார் மென்பொருளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் வடிவமைத்தலுக்கான பெறுகை கேள்வி இல:MOE/STHRD/SJ-BSW1 உடன் சம்பந்தப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர, பொறியியல் பீடத்திற்கான கல்விசார் மென்பொருளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் வடிவமைத்தல் கேள்வி இல MOE/STHRD/SJ-BSW1 இற்காக பிரசுரிக்கப்பட்ட கேள்வி திறத்தலை ஒத்திவைப்பதாக பெறுகைக்குழு தீர்மானித்துள்ளது

புதிய திகதி மற்றும் கேள்வி திறக்கப்படும் நேரம், 2022.05.13ஆம் திகதி 14.30 மணி ஆகும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**நுகேகொடை**
**திகதி - 11.05.2022**

---

## விஷேட அட்டோணி தத்துவப் பத்திரம் மீளப்பெறல் தொடர்பான அறிவித்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம் உக்குவெல, கலல்பிடிய பழைய கொலணி, இல. 1 இல் வசிக்கும் மரிக்கார் தம்பி சித்தி ஜரினா (தே.அ.எண். 625751055 வி) ஆகிய நான், இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அனைத்து பிரஜைகளுக்கும் இத்தால் அறிவிப்பது யாதெனில், பிரசித்த நொத்தாரிஸ் அசங்க திலகரத்னவினால் இரண்டாயிரத்து பதினெழாம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி முடிக்கப்பட்ட இலக்கம் 4766 - 27.11.2017 விஷேட அட்டோணி தத்துவப் பத்திரம் மூலம் என்னால், உக்குவெல, கலல்பிடிய பழைய கொலணி, இல. 1 இல் வசிக்கும் மொஹமட் காசிம் சித்தி பாத்திமா (தே.அ. எண். 878060261வி) என்பவருக்கு வழங்கிய மேற்படி விஷேட அட்டோணி தத்துவப் பத்திரத்தை இரண்டாயிரத்து இருபத்தி இரண்டாம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திதகி தொடக்கம் செல்லுபடியற்றதென்றும் அந்நாள் மேற்கூறிய தத்துவப்பத்திரத்தை மீளப்பெறுவதாகவும் அறிவிக்கின்றேன்.

மேலும் இரண்டாயிரத்து இருபத்தி இரண்டாம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி முதல் மேற்படி தத்துவப்பத்திரம் மூலமாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பு கூற மாட்டேன் என்றும் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**மரிக்கார் தம்பி சித்தி ஜரினா,.**
**இல. 1, கலல்பிடிய பழைய கொலணி,**
**உக்குவெல.**

---

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

---

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு

# விலைமனுக்கோரல்

## வீதி அபிவிருத்தி அதிகார சபையின், அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தற் பிரிவிற்குப் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக விலைமனுக்கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின், நெடுஞ்சாலை இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தற் பிரிவின் (அ.நெ.இ.ப மற்றும் நி.பிரிவு) பெறுகைக்குழுவின் தலைவரினால், அப்பிரிவின் பின்வரும் செயற்றிட்டத்திற்காக, பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பெற்றுள்ள, முன்னணி சேவை வழங்கும் தகுதியும் தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | சேவைகள் வழங்கப்பட வேண்டிய அமைவிடம் | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைமனுப் பிணையம் ரூபா |
|---|---|---|---|---|
| RDA/EOM&M/GOSL/Sec.ser/CEP/202148 | அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல் மற்றும் நிர்வகித்தற் பிரிவுக்குப் பாதுகாப்புச் சேவையை வழங்கல் மத்திய அதிவேக நெடுஞ்சாலை | மீரிகம தம்பொக்க நாகலகமுவ குருணாகல் யக்கபிட்டிய | 365 | 150,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அ.நெ.இ.ப. மற்றும் நி.பிரிவானது செயற்பாட்டு முகவர் நிறுவனமாகும்.
03. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்
04. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு விலைமனுதாரர், இதற்கு நிகரான எண்ணிக்கையான ஊழியர்களை வழங்குதல் தொடர்பான அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
05. விலைமனு மூடப்படும் தினத்திலிருந்து நாட்காட்டி நாட்கள் 91 (2022.09.02) வரை விலைமனு செல்லுபடியாகுதல் வேண்டும்.
06. மேற்படி அட்டவணையில் காணப்படும் பெறுமானத்திற்கான, விலைமனுப் பிணையமொன்று, விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2022.09.30) வரை செல்லுபடியாகுதல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையமொன்று இணைக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. விலைமனுதாரரினால், விலைமனுவின் அனைத்துப் பக்கங்களிலும் கையொப்பமிட்டு அலுவலக முத்திரை இடப்படல் வேண்டும்.
08. 2022.05.27 அன்று 11.30 இற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின், அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தற் பிரிவின் குருணாகல் இடைமாறல் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் கண்டிப்பாகக் கலந்துகொள்ளல் வேண்டுமென்பதுடன், அவ்வாறின்றேல் அந்நிறுவனத்தின் விலைமனு, செல்லுபடியற்றதாவதற்கு அல்லது பெறுகைக்கான தகைமையை இழப்பதற்கு இடமுண்டு
09. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனுப் படிவத் தொகுதியொன்றை, மீளளிக்கப்படாத ரூபா 5,000.00+400.00(VAT) இற்கான கட்டணத்தைக் காசாகச் செலுத்தி, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியிலமைந்துள்ள, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின், அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தற் பிரிவின் பணிப்பாளரின் அலுவலகத்தில் எழுத்துருவ விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து, 2022.05.11 முதல் 2022.06.02 மணிவரை மு.ப.9.00 மணிமுதல் பி.ப.2.30 மணி வரையான காலப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவராண்மை/பிரதிநிதி மற்றும் விலைமனுவின் சித்திகரமான வெற்றியாளர்கள் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் விலைமனுத் தொடர்பாகப் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டும். 2022.06.03 அன்று பி.ப.2.00 இற்கு விலைமனு மூடப்படும்.
10. 2022.06.03 அன்று பி.ப.02.00 இற்கு முன்னர், முத்திரையிடப்பட்ட விலைமனு மற்றும் பிரதியொன்று, "தலைவர், அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரித்தல், நிர்வகித்தல் பிரிவு, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் தபாலுறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "பாதுகாப்பு சேவையை வழங்கல் - மத்திய அதிவேக நெடுஞ்சாலை" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
11. மேற்படி முகவரியின் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாகவே அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.
12. மேலதிக விபரங்களிற்காக தொலைபெசி இலக்கம் பொறியியலாளர் (அ.நெ.இ.ப.மற்றும் நிர்வகித்தற் பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை, தொ.பே - 0113047806

**தலைவர்**
**அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தற் பிரிவின் பெறுகைக்குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம**

---

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் புதிய களனி பாலம் செயற்றிட்டம் பிரிவின் பராமரிப்பு நடவடிக்கைகள் சார்பாக தொழிலாளர்களை வழங்குதல் மற்றும் அதிவேக நெடுஞ்சாலையின் செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தகவல் தொழில்நுட்ப விடயங்கள் (கெலனிகம, இமதுவ மற்றும் பெலிஅத்த உள்ளக இடைமாற்ற அலுவலகம்) சார்பாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வழங்குவதற்காக விலைமனுக்கோரல்

01. அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் (நெ.செ.பரா மற்றும் செ. பிரிவு) பெறுகைக் குழுவின் தலைவரால், வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக அதிவேக நெடுஞ்சாலை பிரிவின் கீழ்க்காணும் செயற்றிட்டங்களுக்காக தகைமையும் தகுதியுமுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | ஒரு நாளைக்கான தொழிலாளர் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் (மாதம்) | முழுத் தொழிலாளர் நாட்கள் எண்ணிக்கை | மீளளிக்கப் படாத தெகை (ரூ) | கேள்வி பிணை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 01. RDA/EOM&M/GOSL/MNT/NKB/2022/02 | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் புதிய களனி பாலம் செயற்பாட்டுப் பிரிவின் பராமரிப்பு விடயங்களுக்காக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் | தொழிலாளர்கள் 15 | 12 | 4500 | 5000.00 + 400.00 (VAT) | 250,000.00 |
| | | பயிற்சி பெற்றவர்கள் 03 | 12 | 900 | | |
| 02. RDA/EOM&M/GOSL/IT/TECH/2022/23 | அதிவேக நெடுஞ்சாலையின் தகவல் தொழில்நுட்ப விடயங்கள் சார்பாக தகைமையான பயிற்சிபெற்ற தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் (கெலனிகம, இமதுவ மற்றும் பெலிஅத்த உள்ளக இடைமாற்று அலுவலகத்திற்கு) | 06 | 12 | 1800 | 5000.00 + 240.00 (VAT) | 110,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்
04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
05. விலைமனுக்களின் சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் (2022-09.02) வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2022.09.02ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்) குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைமுறியுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்படல் வேண்டும்
08. மேற்படி ஒப்பந்த இல 01 இற்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022.05.25ஆம் திகதி 14.00 மணிக்கு சீதுவ, மேலதிக பணிப்பாளர் அலுவலகத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்திக்கு உரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெறும் மற்றும் ஒப்பந்த இல 02 இற்கு குறித்த கூட்டம் 2022.05.26 மு.ப. 11.00 இற்கு கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகமவில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு முகாமைத்துவப் பிரிவில் நடைபெறும் இதில் கலந்துகொள்ளல் கட்டாயமாவதுடன், இல்லையெனில் அந்நிறுவனத்தின் கேள்வி இரத்துச் செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.
09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒரு விலைக்கோரல் ஆவணத்திற்கு மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாக செலுத்தி கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரித்தான நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2022.05.11ஆம் திகதி முதல் 2022.06.02ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையும் சிங்கள மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர்/ பிரதிநிதி மற்றும் வெற்றிகரமான கேள்விதாரர் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் இயைபுடைய கேள்விக்கு பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும். 2022.06.03ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிவுறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.06.03ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''குறித்த செயற்றிட்டத்தின் பெயரை குறிப்பிடப்படல் வேண்டும்.
11. வீதி அபிவிருத்தி அதிகார சபை, பண்டாரகம வல்கம கஹட்டகஹஹேன எனும் இடத்திலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.
    - பொறியியலாளர் - (பராமரிப்பு - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 011 3047806
    - பொறியியலாளர் (கணனி) - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு வீதி அபிவிருத்தி - அதிகார சபை, தொலைபேசி - 0774777689

**தலைவர்**
**அதிவேக வீதி செயற்பாடுகள். பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

# நகர்வலம்



# அநுராதபுரம் நகர அபிவிருத்தி திட்டத்தில் 24 திட்டங்களை முன்னெடுக்க தீர்மானம்

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் 12 பிரிவுகளின் கீழுள்ள 24 உப திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் தற்சமயம் 11 துணை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மீதமுள்ள திட்டங்களையும் விரைவில் நடைமுறைபடுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த திட்டங்களுக்கான பூர்வாங்க பணிகள் முடிவடைந்து, விரிவான திட்டங்கள், விலை மதிப்பீடுகள் மற்றும் கொள்முதல் ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன்பிரகாரம், வட மத்திய மாகாண பிரதம செயலாளர் மற்றும் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் விஷேட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.



அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அடையாளம் காணப்பட்ட 12 உப திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கும்மிச்சங்குளம் குளக்கரையை நிர்மாணித்தல், தீவுச் சுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் குளத்தைச் சுற்றியுள்ள பாதையை புனரமைத்தல், மற்றும்

(கடப்பனஹ) கடை 50 பகுதியில் அமைந்துள்ள குளத்தைச் சுற்றிய நிலப்பரப்பு மற்றும் நடைபாதைகளை அபிவிருத்தி செய்தல், கும்பிச்சங்குளம் மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை ஊடாக நிலத்தடி சுரங்கப்பாதையை நவீனப்படுத்துதல் உட்பட பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இக்கூட்டத்தில் அநுராதபுரம் மாநகர சபை ஆணையாளர், வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், பிரதம அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் மேலதிக திட்டப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஞானக்காவின் வீடு முற்றுகை; உடமைகளை எரித்து ஆவேசம்

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

ஜனாதிபதியின் ஆஸ்தான சோதிடரான அநுராதபுரத்தில் அமைந்துள்ள ஞானக்காவின் வீடு, தேவாலயம் மற்றும் ஹோட்டல் என்பனவற்றை நேற்று (10) முற்றுகையிட்ட எதிர்ப்பாளர்கள் அவற்றை தீயிட்டு அழித்துள்ளனர்.

அநுராதபுரம் இசுருபுர பகுதியில் அமைந்துள்ள ஞானக்காவின் வீட்டுக்கு முன்னால், 200 க்கும் அதிகமான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும், இவற்றை மீறி ஞானக்காவின் வீடு தாக்குதலுக்குள்ளானது. வீட்டை பாதுகாக்க படையினர் முனைந்த போதும், வீட்டைச் சுற்றியுள்ள சுவர் உடைக்கப்பட்டதால் படையினர் அங்கிருந்து விலகிக் கொண்டனர். பின்னர் போராட்டக்காரர்கள் ஞானக்காவின் உடமைகளில் சிலவற்றை கிராம மக்களுக்கு விநியோகித்ததுடன் வீட்டிற்கு தீவைத்து எரித்துள்ளனர்.

பின்னர் ஞானக்காவின் தேவாலயம் தாக்கப்பட்டது.

பின்னர் புதிய கண்டி வீதியில் அமைந்துள்ள ஞானக்காவின் ஹோட்டலை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் அங்கிருந்த அனைத்து உடமைகளுக்கும் தீவைத்து எரித்துள்ளனர்.



# எருமை மாடுகளை கடத்திச் சென்று இறைச்சியாக விற்பனை செய்தோர் கைது

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

பதிநான்கு இலட்சம் ரூபா பெறுமதிமிக்க 13 எருமை மாடுகளை கடத்திச் சென்று இறைச்சிக்காக விற்பனை செய்த மூவரை, கைது செய்துள்ளதாக தந்திரிமலை பொலிஸார் தெரிவித்தனர்.

தந்திரிமலை கொடகஹவெவ, இராஜாங்கனை மற்றும் கருவலகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 41,39 மற்றும் 40 வயதுடைய மூவரே கைதானவர்களாவர்.

தந்திரிமலை கொடகஹவெவ பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது 21 கால்நடைகள் காணாமல் போயுள்ளதாக கூறி இதற்கு முன்னர் தந்திரிமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் முறைப்பாட்டாளர் காணாமல் போயிருந்த தனது 08 கால்நடைகள் உரிய இடத்துக்கு வந்துள்ளதாகவும் மிகுதி 13 கால்நடைகளை இதுவரைக்கும் காணவில்லை எனவும் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டிற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் சந்தேக நபர்களை கைது செய்ய முடிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தந்திரிமலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிலங்க பெனாந்துவின் ஆலோசனைப்படி சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கட்டாரில் வாழும் புத்தளம் அமைப்பினரின் ஒன்றுகூடல்

(புத்தளம் தினகரன் நிருபர்)

கட்டாரில் வாழும் புத்தளம் உறவினர்கள் ஏற்பாடு செய்த ஒன்றுகூடல் அண்மையில் இடம்பெற்றது.

கட்டாரிலுள்ள லக்பிம உணவகத்தில் இந்த ஒன்றுகூடல் இடம்பெற்றது. ஊரின் முக்கிய தேவைகளுக்காக பல வழிகளிலும் உதவி செய்யும் இந்த அமைப்புக்கு புத்தளத்தில் பெரும் வரவேற்புள்ளது. இரண்டு வருடங்களாக கொவிட் கொரோனா பிரச்சினையால் இந்த அமைப்பு இயங்காதிருந்தது. இந்நிலையிலே,

இக்கூட்டம் கட்டாரில் இடம்பெற்றுள்ளது.

இதிலே, அவ்வமைப்பின் கடந்த கால செயற்திட்டங்கள் மற்றும் நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதோடு புதிய நிர்வாக தெரிவும் சிறப்பு உரையும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவ்வமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் சொந்தங்கள் பலர் கலந்துகொண்டனர்.

கடல் கடந்து வாழும் புத்தளத்து சொந்தங்கள் மத்தியில் இயங்கும் மிக முக்கியமான அமைப்புதான் கட்டார் வாழ் புத்தளம் அமைப்பினராவர்.

புத்தளம் நகரில் வாழும் மக்களின் அதிகப்படியான தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்கின்ற வெளிநாட்டில் இயங்கும் ஒரே அமைப்பு இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரம் அரசியல்வாதிகளின் வீடுகள், சொத்துக்கள் தீக்கிரை





(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் அமைச்சர்களான எஸ்.எம்.சந்திரசேன, சன்ன ஜயசுமன, செஹான் சேமசிங்க, பிரதிஅமைச்சரான துமிந்த திஸாநாயக்க பாராளுமன்ற உறுப்பினர் உத்தித்த பேமரத்ன, வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ். எம்.ரஞ்ஜித் சமரகோன் மற்றும் நகர , பிரதேச சபை உறுப்பினர்கள் பலரின் வீடுகள் , அலுவலகங்கள் மற்றும் ஹோட்டல்கள் நேற்று முன்தினம் (09) முற்றுகையிடப்பட்டன.

இவற்றை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அவற்றை தீயிட்டு எரித்ததுடன், உடமைகளையும் சேதமாக்கினர்.

# வீரகெட்டிய பிரதேசத்தில் நிலவிய பதற்றத்தில் நினைவுத்தூபி சேதம்

(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

வீரக்கெட்டிய மெதமுலன பிரதேசத்தை சேர்ந்த பிரதேசவாசிகளால் (09) மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, ஜனாதிபதியின் பெற்றோர்கள் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி சேதமாக்கப்பட்டது.

இத்தூபி, மெதமுலன கிராமத்தில் நிர்மாணிக்கபபட்டிருந்தது.

அத்துடன், இக்கிராமத்தில் இருந்த ராஜபக்ஷ குடும்பத்தின் பரம்பரை வீட்டிற்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

பின்னர், வீரக்கெடிய பிரதேச சபை தலைவரின் வீட்டிற்கு முன்னாலும் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதில், துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் இருவர் உயிரிழந்ததுடன் மேலும் எட்டுப் பேர் பாரிய காயங்களுக்கு உள்ளாகினர். இவர்கள், தங்காலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மெதமுலன கிராமத்தில் வசித்து வந்த முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் கபில திஸாநாயக்கவின் வீட்டிற்கும் ஆர்பாட்டக்காரர்கள் சேதம் விளைவித்து தீ வைத்தனர். முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் தெபரவெள இல்லத்திற்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.





நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் (09) திடீரென ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டதால், கொழும்பிலிருந்து வெளியேற பலர் முண்டியடித்துக் கொண்டனர். இதனால், கொழும்பில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)




# இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதவிருந்த ஒருநாள் தொடர் இரத்து



சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் என்பன எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவிருந்தன.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி விளையாடவுள்ள டெஸ்ட் தொடர் ஐசிசி டெஸ்ட் சம்பியன் ஷிப்புக்கானதாக இருந்தாலும், ஒருநாள் தொடர் ஐசிசி சுபர் லீக்கில் இடம்பெறவில்லை.

அதேநேரம், இலங்கை அணி ஜூன் மாதத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் விளையாடவுள்ளதுடன், ஆகஸ்ட் மாதம் லங்கா பிரீமியர் லீக் நடைபெறவுள்ளது. இதனைத்தொடர்ந்து ஆசியக்கிண்ணம் மற்றும் ரி 20 உலகக்கிண்ணம் போன்ற தொடர்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன.

ஐசிசி சுபர் லீக் அல்லாத பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரை தங்களுடைய போட்டி அட்டவணையிலிருந்து நீக்குவதற்கு திட்டமிட்டிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக மூன்று ஒருநாள் போட்டிகள் இல்லாமல், இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கான தொடரில் பாகிஸ்தான் அணி விளையாடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி இறுதியாக 2019ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்ததுடன், தொடரை 10 என இழந்திருந்து. இலங்கை கிரிக்கெட் அணியானது, இம்மாதம் 15ம் திகதி பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கோலூன்றிப் பாய்தலில் யாழ் மாணவி அபிலாஷினி புதிய சாதனை



கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் (09) ஆரம்பமாகிய தேசிய கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் 18 வயதின்கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி பரந்தாமன் அபிஷாலினி புதிய கனிஷ்ட தேசிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

தேசிய மட்டப் போட்டியில் முதல் தடவையாக பங்குபற்றும் 16 வயதான அபிலாஷினி, 3.15 மீற்றர் உயரம் தாவி அதே பாடசாலையின் முன்னாள் மாணவியான என். டக்சிதாவினால் கடந்த 2019ஆம் ஆண்டு நிலைநாட்டிய தேசிய சாதனையை இவ்வாறு முறியடித்தார்.

அவருடன் குறித்த போட்டியில் பங்குகொண்ட மதிவாணன் ஷாலினி 2.80 மீற்றர் உயரம் தாவி வெள்ளிப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மாணவி சிவபாதம் சுவர்ணா 2.70 மீற்றர் உயரம் தாவி வெண்கலப் பதக்கத்தையும் வென்றெடுத்தனர்.

இந்தப் போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்ற மாணவிகளுக்கு கனாதீபனும், வெண்கலப் பதக்கம் வென்ற சுவர்ணாவுக்கு சுபாஷ்கரனும் பயிற்சி அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

18 வயதின்கீழ் பெண்களுக்கான நீளம் பாய்தலில் மொனராகல நன்னாபுரவ மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த நெத்மிகா மதுஷானி ஹேரத் புதிய போட்டிச் சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார். குறித்த போட்டியில் அவர் 5.98 மீற்றர் தூரத்தைப் பதிவுசெய்தார்.

# தலைவர் பதவியில் சாதனை படைத்த எம் எஸ் டோனி



டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் எம் எஸ் டோனி இரண்டு சாதனைகளை படைத்துள்ளார்.

டெல்லி அணிக்கு எதிரான நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் தலைவர் டோனி 8 பந்தில் 21 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் 20 ஓவர் போட்டிகளில் தலைவர் பதவியில் அவர் 6 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார். விராட்கோலிக்கு அடுத்தபடியாக டோனி 6 ஆயிரம் ஓட்டங்களை தலைவர் பதவியில் எடுத்தார். விராட் கோலி கேப்டன் பதவியில் 6,451 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ரோகித் சர்மா 4764 ஓட்டங்களுடன் 3வது இடத்தில் உள்ளார்.

மேலும் 20 ஓவர் போட்டிகளில் 200 பிடிகளை பிடித்த முதல் விக்கெட் காப்பாளர் என்ற சாதனையையும் டோனி படைத்தார். ஷர்துல் தாகூரின் பிடியை பிடித்ததன் மூலம் இந்த மைல்கல்லை தொட்டார்.

தினேஷ் கார்த்திக் 182 பிடிகளுடன் 2வது இடத்தில் உள்ளார்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..................
வாக்களித்தவர் பெயர் : ..................
முகவரி : ..................
மொபைல் இல. : ..................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நியந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 14-05-2022 இல. 07

நீங்கள் விரும்பும் 9 App இற்கும் வேண்டியளவு data மற்றும் மேலதிகமாக 2GB.
398 ரூபா இற்கு #170#
அழைத்து அல்லது SELFCARE APP ஊடாக இப்போதே அக்டிவ் செய்யுங்கள்.
Non-Stop லொக்கா
SLTMOBITEL
www.sltmobitel.lk

# மகிழடித்தீவு மகிழை இளைஞர் விளையாட்டு கழகம் சம்பியன்

கல்லடி குறூப் நிருபர்



மட்டக்களப்பு விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகம் தனது 52 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 'விளாவூர் யுத்தம்'எனும் தொனிப்பொருளில் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் மகிழடித்தீவு மகிழை இளைஞர் விளையாட்டு கழகம் சம்பியனாக மகுடம் சூடியுள்ளது.

37 ஆணிகளின் பங்குபற்றலுடன் கடந்த 06 ஆம் திகதி விளாவட்டவான் ராஜா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிய விலகல் முறையிலான குறித்த உதைபந்தாட்ட சுற்று போட்டியின் இறுதி நிகழ்வு நேற்று மாலை (08.05.2022) ராஜா விளையாட்டுக்கழக தலைவர் சி.கேதீஸ்ரன் தலைமையில் இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற அரையிறுதிச் சுற்றின் முதலாவது போட்டியில் முனைக்காடு இராமகிருஸ்ணா அணியும், குருந்தையடிமுன்மாரி ரென்ஸ்டார் அணியும் மோதியிருந்தனர். குறித்த போட்டியில் தண்ட உதை மூலம் முனைக்காடு இராமகிருஸ்ணா அணி வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற அரையிறுதிச் சுற்றின் இரண்டாவது போட்டியில் முகத்துவாரம் லைற்ஹவுஸ் அணியும், மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியும் பலப்பரீட்சை நடத்தியிருந்தனர். இதில் தண்ட உதை மூலம் மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து மூன்றாம் நான்காம் இடங்களை தீர்மாணிக்கும் போட்டி தண்ட உதை மூலமான போட்டியாக இடம்பெற்றது.

குறித்த போட்டியில் வெற்றிபெற்ற முகத்துவாரம் லைற்ஹவுஸ் அணி மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொள்ள குருந்தையடிமுன்மாரி ரென்ஸ்டார் அணி நான்காம் இடத்தினை பெற்றுக்கொண்டது.

அடுத்து விளாவூர் யுத்தம் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் முனைக்காடு இராமகிருஸ்ணா அணியும், மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியும் மோதியிருந்தனர்.

இதில் தண்ட உதை மூலம் 04:02 என்ற கோல்கள் அடிப்படையில் மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணி முதலாம் இடத்தினை பெற்றுக்கொள்ள இடண்டாம் இடத்தினை முனைக்காடு இராமகிருஸ்ணா அணி பெற்றுக்கொண்டது.

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் சிறந்த வீரனாக மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியின் தயானந்தனும், சிறந்த பந்துக் காப்பாளராக முனைக்காடு இராமகிருஸ்ணா அணியின் பந்து காப்பார் குமணன் தெரிவு செய்யட்டனர்.

இறுதியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கு வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப்பரிசில்கள் அதிதிகளினால் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி என்.முகுந்தனும், கௌரவ விருந்தினராக மண்முனை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சண்முகராஜாவும் கலந்துகொண்டனர்.

அத்தோடு மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ.ஈஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் எம்.உதயகுமார், மண்முனை மேற்கு பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் பி.ரூபராஜ், முதலைக்குடா மகா வித்தியாலய அதிபர் ரி.கோபாலப்பிள்ளை உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

# அம்பாறை மாவட்ட பாடசாலைகள் கடினபந்து கிரிக்கெட் அணியில் ஸாஹிறா தேசியக்கல்லூரி மாணவர்கள் நான்கு பேர் இடம்பிடிப்பு

மாளிகைக்காடு குறூப் நிருபர்



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நாடு தழுவிய ரீதியில் மாவட்டங்களுக்கிடையில் பாடசாலைகளுக்கிடையில் 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றினை நடாத்தி வருகின்றது.

இச் சுற்றுப் போட்டிக்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து கிரிக்கெட் வீரர்களை தெரிவு செய்யும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்று வந்தது.

இதில் ஸாஹிரா தேசியக் கல்லூரியைச் சேர்ந்த அப்துல் லாஹ் அத்பி , அஸ்மத் ஸஹி , முஹம்மட் ஸஹீம் , பர்ஹத் பறாஸ் ஆகிய நான்கு மாணவர்கள் அம்பாறை மாவட்ட அணியில் இடம்பிடித்துள்ளனர்.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் அண்மையில் நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிறா தேசியக் கல்லூரி கிரிக்கெட் அணி அம்பாறை டீ.எஸ்.சேனநாயக தேசியக் கல்லூரி அணியினரையும் , மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணியினரையும் தோற்கடித்து இரண்டாம் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இம் மாணவர்களுக்கு கல்லூரியின் உடற்கல்வித்துறை ஆசிரியர்களான ஏ.எம்.அப்ராஜ் றிலா, முஹமட் றஜீப் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளரான ஏ.எம்.ஜப்ரான் ஆகியோர் பயிற்சியினை வழங்கி இருந்தனர்.

# திருகோணமலை ஜமாலியா விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவு



கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை அருணகிரி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் சுற்றுப்போட்டியொன்று திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (8)நடைபெற்றது.

இச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு ஜமாலியா விளையாட்டுக் கழகமும்,ஈஸ்டன் ஈகில் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.

இறுதிப் போட்டியில் இரண்டு கழகங்களும் மோதி இறுதியில் 2:0என்ற கோல் கணக்கில் ஜமாலியா விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தினை தனதாக்கியது.

இதன் போது இளைஞர் சேவை அதிகாரியினால் வெற்றிக்கிண்ணம் மற்றும் அதிக கோல்களை அடித்த வீரருக்கும் வெற்றிக்கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டன. அருணகிரி இளைஞர் கழக தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 11ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.